# ஞானசம்பந்தம்

மலர் 13]　　ஜயவருஷ சித்திரைமீ 10—5—54　　[இதழ் 6

தருமபுர ஆதீன ஸ்தாபகர்,



**ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்**

**குருபூஜை விழா 23—5—54.**

ஆசிரியர்: நாகலிங்கத் தம்பிரான்.
உதவி ஆசிரியர்: ச. தண்டபாணி தேசிகர்.
தருமபுர ஆதீன

உ

சிவமயம்

தருமபுர ஆதீனம்

# ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி கோயிலில்

## வாஸந்திக மஹாலக்ஷ்மீ யக்ஞம்

---

உலகத்தில் செல்வங்கள் எல்லாம் பெருகி ஓங்கவும், வறுமைத்துன்பம் நீங்கவும், இவ்வருஷத்தின் கோள்களுடைய நிலைமாற்றத்தால் ஏற்படுங் கேடுகள் விலகவும், எல்லோரும் இன்பத்தோடு இலகவும் நிகழும் ஜயவரு சித்திரைமீ 21உ (3-5-54) திங்கட்கிழமை வளர்பிறையில் தொடங்கி நடைபெற்றுவரும் ஸ்ரீசூக்தபாராயணம், தசாம்ச ஹோமம், சுவாசினீ பூஜை இவைகள், பூரணாகுதியுடன் நிறைவுறும்.

| | |
|---|---|
| 3—5—54 முதல்<br>13—5—54 முடிய | ஸ்ரீசூக்தபாராயண தசாம்சஹவனம் |
| 14—5—54 | ஸ்ரீசூக்தஹவன மஹாபூர்ணாகுதி |
| 15—5—54<br>16—5—54 | ஸ்ரீ மகாலக்ஷ்மி மூலமந்திர தசாம்சஹோமம் |
| 17—5—54 | ஸ்ரீ மகாலக்ஷ்மி மஹாபூர்ணாகுதி |

அன்பர்கள் வந்து கண்டு இம்மை மறுமைப் பயன்கள் எய்துக.

H40


உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி கோயில்

# மஹோத்ஸவப் பத்திரிகை



ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயம்

**14—5—54 முதல் 23—5—54 முடிய**

## திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு

நடைபெறும்

441

உ
சிவமயம்

## சிவபெருமான் துதி

சீர்கொண்ட ஆனந்த மாகி எங்கும்
செறிவாகிப் பரமாகித் திரம தாகி
ஏர்கொண்ட கருணைதிரு வுருவ மாகி
எழில்கொண்டமலைமகளை இடத்திற்கொண்டோன்
கார்கொண்ட நிறங்கொண்ட முகுந்த னுகிக்
கடவுளர்வந் தடிபரவும் கடவுள் கொன்றைத்
தார்கொண்ட முடியனவன் அடியைத் தாழ்ந்து
தாழாத பெருங்கதியில் வாழா நிற்பாம்.

---


தருமபுர ஆதீன ஸ்தாபகர்

## ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

## தோத்திரம்

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்ளரி பொருந்துவிடம் தெரிந்திடாமல்
தாரணிஅன் பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழில் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும் இரு கடைக்கணுளன்
பார்புகழும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன் இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

—சம்பந்தசரணலயர்.



உ

குருபாதம்

பெருங்கருணைத்தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் மீதுவைத்த எல்லையில்லாப் பெருங் கருணையினாலே, காணாத அருவினுக்கும் உருவினுக்கும் நிகழ்தரியாம் சிவலிங்காதி திருவுருக்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற தலங்கள் பலவற்றுள், இந்திரன் அகஸ்தியர் தருமன் ஆகியோர்களால் பூசிக்கப் பெற்றதும், காவிரி முதலிய தீர்த்தங்களால் சிறப்புற்றதும், வில்வாரண்யமென்னும் சிறப்புத் திருநாமம் உற்றதும், தரு க்ஷேத்திரமும் ஆகிய தருமபுரத்தின்கண் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற **ஸ்ரீ ஞானாம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமிக்கு** நிகழும் ஜய ஆண்டு வைகாசித்திங்கள் 1-ம் நாள் (14—5—54) சுக்கிரவாரம் தொடங்கி மஹோற்சவம் நிகழும்.

திருநாட்களில் **திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடும், இன்னிசை** நிகழ்ச்சிகளும் **நாடகங்களும்** நடைபெறும். சிவநேசச் செல்வர்கள் யாவரும் வந்திருந்து, திருவுலாக் காட்சியைத் தினமும் தரிசித்து, சொற்பொழிவுகளைக் கேட்டு இன்புறுமாறு விரும்பும்,

தருமபுர ஆதீன
மடாலயம்,
ஜயஷு
சித்திரை மீ 26உ

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர
ஆதீன கார்பார்,

**சொக்கநாதத் தம்பிரான்.**

---

**ஆதீன மடாலய முகப்பில் மாநாட்டு நிகழ்ச்சிகள் நாடோறும் மாலை 6-மணிமுதல் தொடங்கி நடைபெறும்.**

# திருநாள் விபரம்

| இங்கிலீஷ் தேதி | தமிழ் தேதி | வாரம் | திருநாள் | உற்சவ விபரம் |
|---|---|---|---|---|
| 13 | ஜய வருஷ 31 சித்திரை | குருவாரம் | | உத்திர நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 30-20-க்குமேல் 33-55-க்குள் துலாலக்னத்தில் அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, வாஸ்துசாந்தி, மிருத்ஸங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம். |
| 14 | 1 | சுக்கிரவாரம் | 1 | ஹஸ்த நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 4-45-க்குமேல் 10-க்குள் மிதுனலக்னத்தில் ஸ்ரீ ஞானாம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமிக்கு மஹோத்ஸவ துவஜாரோகணம். |
| மே-மீ 15 | 2 | ஸ்திரவாரம் | 2 | கற்பக விருக்ஷக்காட்சி. |
| 16 | 3 | பானுவாரம் | 3 | பூதம், பூதகி, இடும்பவாகனக்காட்சி. |

| 1954-ஞ | வைகாசி-மீ | | | |
|---|---|---|---|---|
| 17 | 4 | சோமவாரம் | 4 | நந்தி, காமதேனு, குதிரை வாகனக்காட்சி. |
| 18 | 5 | மங்களவாரம் | 5 | சகோபுர ரிஷபவாகனக் காட்சி. |
| 19 | 6 | புதவாரம் | 6 | யானை, அன்னம், ஆட்டுக்கடா வாகனக்காட்சி. |
| 20 | 7 | குருவாரம் | 7 | **திருக்கல்யாண வைபவம்,** புஷ்பவிமானம், வெள்ளி ரதக்காட்சி. |
| 21 | 8 | சுக்கிரவாரம் | 8 | குதிரை, கிளி, யானை வாகனக்காட்சி. |
| 22 | 9 | ஸ்திரவாரம் | 9 | பூராட நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 3-47-க்குமேல் 9-14-க்குள் மிதுனலக்னத்தில் ரதாரோகணம் **திருத்தேர்.** |
| 23 | 10 | பானுவாரம் | 10 | காலை ஸ்ரீ சபாநாயகர் தீர்த்தங்கொடுத்தருளல், பிறகு பஞ்சமூர்த்திகளும் ரிஷபாரூடராய் எழுந்தருளி காவிரியில் தீர்த்தங்கொடுத்தருளல். இரவு அவரோகணம். |
| 24 | 11 | சோமவாரம் | | மௌன உற்சவம். |
| 25 | 12 | மங்களவாரம் | | சண்டேசர் உற்சவம். |

14—5—54 வெள்ளிக்கிழமை முதல்திருநாள்

மாலை 6-மணிமுதல்

---

தலைவர்:

**ஸ்ரீ. ராஜாஸ்ரீ ராஜாராம் ராஜாசாகேப் சத்திரபதி,**

சீனியர்பிரின்ஸ், தஞ்சை அரண்மனை.

'திருநெறியதமிழ்'

வித்துவான்,

**திரு. G. சுப்பிரமணியப்பிள்ளையவர்கள், M. A., B. L.,**

தமிழாராய்ச்சித்துறைத் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

'அப்பர் தேவாரம்'

**திருமதி. குகப்பிரியையம்மையாரவர்கள்,**

சென்னை.

'நயத்திற்குச் சுந்தரனார்'

வித்துவான், **திரு. மு. இரத்தினதேசிகரவர்கள்,**

தலைமைத்தமிழாசிரியர், கழக உயர்நிலைப்பள்ளி, திருவாரூர்.

'சிவபோகசாரம்'

**ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளவர்கள்,**

கட்டளைவிசாரணை, திருக்கடவூர் தேவஸ்தானம்.

---

நாடகம்:

**மங்கையர்க்கரசி**

ஆதீனக் கல்விநிலைய மாணவர்கள்

15—5—54 சனிக்கிழமை 2-ம் திருநாள்

மாலை 6-மணிமுதல்

---

**தலைவர்:**

திரு. T. M. நாராயணசாமிபிள்ளையவர்கள்
M. A., B. L., M. L. C.

திருச்சிராப்பள்ளி.

**'திருவிளையாடல்'**

பல்கலைச்செல்வர்,

திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரனுரவர்கள்
M, A., B. L., M. O. L.

சென்னை.

**'கலங்கரை விளக்கு'**

திருமதி. A. R. இந்திரா அவர்கள், M. A.,
தமிழ்விரிவுரையாளர், எத்திராஜு பெண்கள் கல்லூரி, சென்னை.

**'சைவ வைணவ ஒற்றுமை'**

திரு. S. V. வரதராஜ ஐயங்காரவர்கள்,
சென்னை.

**'சொக்கநாதக் கலித்துறை'**

ஸ்ரீமத். நாகலிங்கத் தம்பிரான் சுவாமிகளவர்கள்,
கட்டளைவிசாரணை, திருவையாறு தேவஸ்தானம்.

---

**நாடகம்:**

## வென்றது யார்? – விடுதலை

ஆதீனக் கல்விநிலைய மாணவர்கள்

16—5—54 ஞாயிற்றுக்கிழமை 3-ம் திருநாள்

மாலை 6-மணி முதல்

---

தலைவர் :

**திரு. K. வேங்கடசாமி நாயுடு அவர்கள்,**
B. A., B. L.,

*முன்னாள் அறநிலையப் பாதுகாப்பு அமைச்சர், சென்னை.*

**'கம்பர்கண்ட அரசியல்'**

சொல்லின்செல்வர்,

**திரு. R. P. சேதுப்பிள்ளையவர்கள் B. A., B. L.,**

*தலைமைத்தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக்கழகம், சென்னை.*

**'உபநிடதம்'**

**டாக்டர், T. M. P. மகாதேவன் அவர்கள், M. A., Phd,**

*பல்கலைக்கழகம், சென்னை.*

**'கந்தபுராணக்கவிநலம்'**

திருவாவடுதுறை ஆதீன வித்துவான், சித்தாந்தசைவமணி,

**திரு. த. ச. மீனுட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்,**

தடந்தை.

**'தட்சிணமூர்த்தி திருவருட்பா'**

**ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகளவர்கள்**

*கட்டளைவிசாரணை, மாயூரம் - தருமைக்கட்டளை தேவஸ்தானம்.*

---

**நாடகம் :**

# திருஞானசம்பந்தர்

தருமபுர ஆதீனம்

சென்னை சமயப்பிரசாரநிலைய மாணவர்கள்

17—5—54 திங்கட்கிழமை 4-ம் திருநாள்

மாலை 6-மணிமுதல்

---

தலைவர் :

**திரு. P.T.S குமாரசாமிச் செட்டியாரவர்கள்**

*தலைவர், சிவனடியார் திருக்கூட்டம், தடந்தை.*

**'திருவாய்மொழி'**

**திரு. C. ஜகந்நாதாசாரியார் அவர்கள், M. A.,**

*தமிழ்ப்பேராசிரியர், விவேகானந்தா கல்லூரி, சென்னை.*

**'திருப்பாவை ராஸக்கிரீடை'**

**திரு A. N. பரசுராம் அவர்கள், M. A.,**

*பிரின்ஸிபால், மினர்வா கல்லூரி, சென்னை.*

**'வாசகத்தேன்'**

தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், வாசகமணி,

**திரு. S. ருத்திரபதி அவர்கள், M. A.,**

*பேராசிரியர், சென்ட்ரல் காலேஜ், பெங்களூர்.*

**'சொக்கநாதவெண்பா'**

**ஸ்ரீமத். முத்துக்குமாரசாமித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள்**

*கட்டளைவிசாரணை, திருக்கை தேவஸ்தானம்.*

---

# இசையரங்கு

தேவார இசைமணி, பண்ணிசைமணி, சங்கீதபூஷணம்

**திரு. P. சுவாமிநாதனவர்கள் & பார்ட்டி**

*திருமுறை ஆசிரியர்.*

*தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையம், சென்னை.*

18—5—54 செவ்வாய்க்கிழமை 5-ம் திருநாள்

மாலை 6-மணிமுதல்

---

தலைவர்:

**கனம். திரு. M. A. மாணிக்கவேலு நாயகர் அவர்கள், B. A., B. L.,**

*சென்னைராஜ்ய, ரெவின்யூ மந்திரி.*

**,விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்'**

திரு. S. மீனாட்சிசுந்தர முதலியாரவர்கள், B. A., L. T.,

*நகராண்மைக்கழகத் தலைவர், ஈரோடு.*

**'அரசியலும் சமயமும்'**

வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகரவர்கள்,

*துணைத்தலைவர், ஆதீனப் பல்கலைக்கல்லூரி, தருமபுரம்.*

**'திரிபதார்த்தரூபாதி தசகாரிய அகவல்'**

தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், பாலகவி, வயிநாகரம்,

திரு. வே. இராமநாதன் செட்டியாரவர்கள்,

*ஆசிரியர், 'செட்டிநாடு' தேவகோட்டை.*

**'ஞானப்பிரகாச மாலை'**

வித்துவான்,

ஸ்ரீமத். மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகளவர்கள்,

*கட்டளைவிசாரணை, சீகாழி தேவஸ்தானம்.*

---

**நாடகம்:**

# குருஞானசம்பந்தர்

தருமபுர ஆதீனம்

சென்னை சமயப்பிரசாரநிலைய மாணவர்கள்

19—5—54 புதன்கிழமை 6-ம் திருநாள்

மாலை 6-மணிமுதல்

---

தலைவர்;

திரு. N. ரகுநாதய்யர் அவர்கள், B. A,

துணையாசிரியர், 'இந்து' சென்னை.

'சங்க இலக்கியத்தில் சமயமணம்'

வாகீசகலாநிதி,

திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள், M. A.,

ஆசிரியர், 'கலைமகள்' சென்னை.

'தொண்டர்தம் பெருமை'

தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான்,

திரு. இராம. கோவிந்தசாமிப்பிள்ளையவர்கள்,

தமிழ்ப்பேராசிரியர், அரசர்கல்லூரி, திருவையாறு.

'திருக்குறளும் திருத்தொண்டரும்'

பெருஞ்சொல் விளக்கனர்,

திரு. அ. மு. சரவணமுதலியாரவர்கள்,

பூவாளூர்.

'முத்துக்குமாரசுவாமி திருவருட்பா'

ஸ்ரீமத் சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகளவர்கள்,

கட்டளைவிசாரணை, வேளூர் தேவஸ்தானம்.

---

நாடகம்:

பரஞ்சோதி

ஆதீனக் கல்விநிலைய மாணவர்கள்

20—5—54 வியாழக்கிழமை 7-ம் திருநாள்

மாலை 6-மணிமுதல்

---

தலைவர் :

**திரு C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள், B. A. B. L.**

*முன்னாள் அறநிலையமன்ற ஆணையாளர், கோவை.*

**'சேக்கிழார் கண்ட அரசியல்'**

**திரு. K. சோமசுந்தரம் அவர்கள்,**

*துணையாசிரியர், 'பாரத தேவி' சென்னை.*

**'விறன்மிண்டர்'**

**திரு. S. சுந்தரேசஞ் செட்டியார் அவர்கள், B.A. L.T.,**

*தலைமையாசிரியர், நகராண்மைக்கழக உயர்நிலைப்பள்ளி,*

*தடந்தை.*

**'கிளிவிடு தூது'**

வித்துவான்,

**ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்,**

*கட்டளைவிசாரணை, திருநள்ளாறு தேவஸ்தானம்.*

**யோகாசனங்கள்**

**திரு. P. A. திருவேதி அவர்கள்.**

*தஞ்சை.*

---

**நாடகம் :**

**மதுரக்கனி**

ஆதீனக் கல்விநிலைய மாணவர்கள்

21—5—54 வெள்ளிக்கிழமை 8-ம் திருநாள்

மாலை 6-மணிமுதல்

தலைவர் :

**திரு. ஜே. சிவஷண்முகம்பிள்ளை அவர்கள்,**

*சட்டசபைத் தலைவர், சென்னை.*

**‘கற்சிலையும் - கற்பனையும்’**

**திரு. தொ. மு. பாஸ்கரத்தொண்டமான் அவர்கள், M. A.,**

(Asst. to the Special Officer Tanjore Dt. Board)

**‘திருவள்ளுவரும் திருமூலரும்’**

**திரு. இளவழகனார் அவர்கள்,**

*‘நந்தலம்’ மாம்பாக்கம், சென்னை.*

**‘நல்லவண்ணம் வாழலாம்’**

**ஸ்ரீ. பி. ஸ்ரீ. ஆச்சார்யா அவர்கள்,**

*துணையாசிரியர், ‘ஆனந்த விகடன்’ சென்னை.*

**‘நன்னெறிகாத்தநாதனார்’**

திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான்,

**திரு. K. ஆறுமுக நாவலர் அவர்கள்,**

*ஆசிரியர், ‘தொண்டன்’ நாகர்கோயில்.*

**நாடகம் :**

**தலைவர்: திருமதி. புஷ்பம் நடராஜன் அவர்கள்.**

## திலகவதி

ஆதீன கல்விநிலைய மாணவர்கள்

22—5—54 சனிக்கிழமை 9-ம் திருவிழா

மாலை 6-மணிமுதல்

---

தலைவர்:

**திரு. நடராசநாடார் அவர்கள், B. A., B. L.,**

*ட்ரிப்யூனல்கோர்ட் ஜட்ஜ், சென்னை.*

'கம்பர்கண்ட இலக்கியம்'

**திரு. ச. சிவகுமாரன் அவர்கள், M. A.,**

*செயலர், சைவசித்தாந்த சமாஜம், சென்னை.*

'ஞானத்தின் திருவுரு'

வித்துவான்,

**திருமதி. சி. ந. குழந்தையம்மாளவர்கள்,**

*தமிழ்விரிவுரையாளர், நிர்மலாகல்லூரி, கோவை.*

'இறவாத இன்ப அன்பு'

தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான்,

**திரு. வை. மு. சண்முகதேசிகரவர்கள்,**

*தலைமைத்தமிழாசிரியர், நேஷனல் ஹைஸ்கூல், நாகை.*

'பண்டாரமும்மணிக்கோவை'

வித்துவான்,

**ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளவர்கள்,**

*தலைவர், தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையம், சென்னை.*

---

## வீணைவிருந்து

வீணை சங்கீதபூஷணம்,

**திரு. R. சண்முகசுந்தரம்பிள்ளையவர்கள் & பார்ட்டி**

*வீணையாசிரியர், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.*

23—5—54 ஞாயிற்றுக்கிழமை 10-ம் திருநாள்

காலை 9-மணிமுதல்

---

**'முத்திநிச்சயம்'**

## ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்,

*ஆதீனப் பிரசாரக்குழுத் தலைவர்,*

*இராஜாங்கக்கட்டளை, கட்டளைவிசாரணை, திருவாரூர்.*

**'சுந்தரர் செந்தமிழ்'**

திருவாவடுதுறை ஆதீன வித்துவான்,
சித்தாந்தசொல்மணி,

## குலசை. திரு. வீர. சிவசுப்பிரமணியம் அவர்கள்,

*மதுரை.*

**'பழம் பாடல்'**

தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான்,

## திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்,

*தமிழ்ப்பேராசிரியர், ஆதீனப் பல்கலைக்கல்லூரி, தருமபுரம்.*

**'திருவருட்பயன்'**

தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான்,

## திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள்,

*தமிழாசிரியர், கார்ப்பொரேஷன் உயர்நிலைப்பள்ளி, சென்னை.*

23—5—53 ஞாயிற்றுக்கிழமை

தருமபுர ஆதீன ஸ்தாபகர்.

## ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

## குருபூஜை விழா

காலை 11-மணிமுதல்:

## ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் பூஜை

விழா மலர்:

## திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்
## (இரண்டாம் திருமுறை)
## குறிப்புரையுடன்

24—5—54 திங்கட்கிழமை

காலை 11-மணிமுதல்

## ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் பூஜை

நடுப்பகல் 1-மணிக்கு:

## மாகேசுவர பூஜை

மாலை 6-மணிக்கு

## இசையரங்கு:

தருமபுர ஆதீன இசைப்புலவர், எட்டயபுரம் சமஸ்தான
வித்துவான், இசையரசு, தேவாரமணி,

**திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் & பார்ட்டி**

இரவு:

## பட்டினப்பிரவேசம்

தருமபுர ஆதீனம் வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில்



துறைசை, தருமை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள்

தருமபுர ஆதீனம் வேலூர் தேவஸ்தானம்
அனாதை விடுதிக்குழந்தைகளுடன்



துறைசை, தருமை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள்

443

உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 13] ஜயஹூ சித்திரைமீ 10—5—54. [இதழ் 6

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினுய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

## தட்பமும் வெப்பமும்

கோடை வெய்யில் மிகுதி. சூரியன் தன்வெப்பர் முழுமையும் காட்டி வாட்டுகின்றான். உடல் புழுங்குகிறது. மக்கள் குளிர்தருவை நாடுகிறார்கள். மெல்லிய காற்றை விரும்புகிறார்கள். குளிர்ந்தபானத்தை அருந்துகிறார்கள். ஆறிய சோற்றில் அலாதிப் பிரியம்; இவ்வளவும் வெப்பத்தால்வாடும் உடலுக்குத்தேவை. உயிரும் வெப்பத்தால்தான் வாடுகிறது. ஆனால் அதனை உணர்வார்தாம் சிலர். உயிருக்குள்ள வெப்பம் என்ன? பழவினைப்பயனால் வரும் இன்பத்துன்பங்களின் விளைவு. அதை நீக்க ஒரேவழிதான் உண்டு. அதுதான் இறைவன் திருவடிச் சிந்தனை. அது இடையீடில்லாது நிலைத்து விடுமானால் மாசில் வீணையும் மாலை மதியமும் வீசுதென்றலும் கிடைத்துவிடுமானால் நம்பாடு ஒரே ஆனந்த அனுபவக் கும்மாளந்தான். அதற்கு ஒரு வகையில் ஞானசாத்திரப் பயிற்சி இன்றியமையாதது. அதனை அனைவரும் அடைந்து

உய்ய இந்த ஆண்டிலும் கோடைக்காலப் பயிற்சி வகுப்பை நடத்த ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவுளம் பாலித்தமை மிக மிகப் போற்றற்குரிய நிகழ்ச்சி. இதில் கலந்து கொண்ட அறிஞர்கள் அனைவரும் அப்பர் சுவாமியாகக் காட்சியளிக்கிறார்கள். எதனால்? உடலுக்கு ஒவ்வாதகோடை வெப்பத்தை குருஞானசம்பந்தப் பெருமான் திருவடி நிழலிலே தேவார இன்னிசைத் தென்றற்காற்று வீசச் சொக்கலிங்கப் பெருமானது அருள் ஆரமுதத்தை வாரி உண்டு இன்பமாக வீற்றிருத்தலால்; அல்லவா?

இத்தகைய பெரும்பணியால் வெப்பம் தட்பமாயிற்று புலவர்கள் புலவர்களாகின்றனர்; சிவஞானம் தழைத்து ஓங்குகிறது; இத்தகைய பயிற்சி வகுப்பால் நமது பழமை யான வேத ஆகம சாத்திர இதிகாசபுராண தோத்திர நயங்களை அறிந்துய்கிறோம்.

இத்தகைய திட்டத்தை உருவாக்கி நடத்தி வருகின்ற ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைப் போற்றுகிறோம். வணங்குகிறோம்.

---

## குருஞானசம்பந்தர்

ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல் லாம்கல்வி கேள்வியல்லல்
ஓய்வார் சிவாநந்த வாரியுள்ளே ஒன்றும் இரண்டுமறத்
தோய்வார் கமலையுள் ஞானப்பிர காசன்மெய்த் தொண்டர்களே.

---

445

உ

குருபாதம்

தருமபுர ஆதீன ஸ்தாபகர்

# ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் குருபூஜை விழா

---

# வேதாகம சைவசித்தாந்த சமயபோத கோடைக்காலப் பயிற்சி வகுப்பு

---

## நோக்கம்:

இப்போதுள்ள நிலையில் பொதுவாக நம் இந்து சமய வளர்ச்சி கருதி சமயப் பயிற்சி வகுப்புக்கள் Refresher courses திட்டத்தில் நடைபெறச் செய்தல் நல்ல பயன் அளிக்கும். அதிலும் முக்கியமாகப் பள்ளிக்கூட ஆசிரியர்களும் ஆலய நிர்வாகிகள், ஆலயப்பணியாளர்கள், அர்ச்சகர்கள் முதலியோருக்கும் நமது சமயத்தின் பொதுக் கொள்கைகள், அடிப்படைத் தத்துவங்கள், ஆலய வழிபாட்டு முறை, அதன் அவசியம் முதலியன பற்றி அடிக்கடி நினைவுபடுத்தி வருதல் நல்ல பயன் அளிக்கும் என்று நம்பப் படுகிறது.

அதற்காகச் சென்ற சில ஆண்டுகளாகவே இவ்வாதீனத்தில் இம்மாதிரி கோடைக்கால வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அதனுல் பலரும் பயன்பெற்று வருகிருர்கள். ஆதீனப்பணிகள் பலவற்றில் இதுவும் பயன் தரக்கூடியதாக இருக்கிறதென்று அனுபவ பூர்வமாகவும் தெரியவந்திருக்கிறது.

இந்த நன்னேக்கத்தைத் திருவுளங்கொண்டு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் இவ்வாண்டும் கோடை விடுமுறைக்காலத்தில்வகுப்பு ஒன்று நடத்தத் தீர்மானித்தார்கள்.

அதன்படி தருமபுரம் ஆதீன மடாலயத்தில் 1—5—54 முதல் 22—5—54 வரை வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது.

**பாடத்திட்டம் :**

வேதம், உபநிஷதம், ஆகமம், சைவசித்தாந்தம், அத்வைத சித்தாந்தம், வைணவ சித்தாந்தம், மாத்வ சித்தாந்தம், இதிகாசம், பதினெண்புராணம், கல்வெட்டுகள், இதர மதங்கள், ஆதீன தேவஸ்தானங்கள்.

## தொடக்க விழா நிகழ்ச்சி.

## (1—5—54)

**வழிபாடு :** வகுப்பில் கலந்துகொள்ள வந்திருந்தோர் அனைவரும் அவரவர்களின் சமயப் பொலிவுடன் வழிபாட்டிற்கு வந்திருந்தார்கள். அன்றைய விழாத் தலைவர் பிரும்மஸ்ரீ ஆர். லக்ஷ்மணய்யர் அவர்களும் வந்திருந்தார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் எழுந்தருளியிருந்தார்கள். ஆலயவழிபாடுகள் நடைபெற்றன. வழிபாடு முடிந்தவுடன் ஸ்ரீமகாலக்ஷ்மி துர்க்கையம்மன் சந்நிதியில் வகுப்புத்தொடங்கியது.

**வரவேற்புரை :**

சென்னையிலுள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத் தலைவர் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை வழங்கினார்கள்.

உரையின் சாரம் : இன்றைய உலகம் எதற்கெடுத்தாலும் பகுத்தறிவு பகுத்தறிவு என்று கூறிக்கொண்டு பயனற்ற வழியில் காலத்தைச் செலுத்துகிறது. என்புருக்கிநோய் என்பதொரு பொல்லா நோய். இந்நோயை எந்த விஞ்ஞானியாலும் பகுத்தறிவு வாதியாலும் நீக்கமுடியாது. ஆனால் எலும்பையும் பெண்ணாக்கிப் பெருமைகண்ட நாடு நம் நாடு. மயிலாப்பூரிலே அன்று திருஞானசம்பந்தர் எலும்புகளை

யெல்லாம் ஒன்றுசேர்த்துப் பூம்பாவை ஆக்கினர். அரசிய லுக்கும் மதத்திற்கும் தொடர்பில்லை என ஒதுக்கிவிட்ட இக்காலத்தில் இம் மடாலயத்தில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் இக்கால நிலைக்கேற்ப சிவாகமங்களையும், சித்தாந்தங்களையும் வேதம் புராணம், இதிகாசம், கல்வெட்டு என்பன போன்றவைகளையும் உங்க ளிடையே கூடியிருக்கும் ஆசிரியர்கள் மூலம் கற்பிக்கத் திரு வுளம்பற்றினர்கள். அம்முறையில் இங்குக்குழுமியுள்ள தலைவர் அவர்கள், ஆசிரியப் பெருமக்கள், மாணவக்குழுவினர் எல்லோரையும் வரவேற்கிறேன்.

**ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் ஆசியுரை :**

அன்பர்களே இன்று ஒரு புனிதமான நாள். ஏனென்றால் வருங்கால உலகைச் சமய உலகாக்கவிருக்கும் ஆசிரியர்களும், மாதொரு பாகனுக்கு வழிவழி அடிமை செய்யும் வேதியர் களும் இங்குக் கூடியிருக்கிறார்கள். ஆசிரியர்களுக்குள்ள பொறுப்பு மிகவும் மகத்தானது. இன்றைய நிலையில் உள்ள பிள்ளைகளைச் சமயப் பணியில் ஈர்த்துச் செலுத்துவது ஆசிரியர் கள் கடமை. இக்காலத்தில் எங்கும் உண்மையில்லை. வெறும் பேச்சுப்பேசிக்கொண்டே போவதால் பயனில்லை. காரியத்தில் இறங்கவேண்டும். இறை வழிபாட்டைச் செய்ய வேண்டும். சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்ல வேண்டும் சமய வாழ்க்கையில் சிறிதும் வழுவாதிருந்ததால் தான் அன்றைய மக்கள் ஒன்று சேர்ந்து ஞானப் பொக்கிஷங் களாகிய இதிகாசம் ஆகமம், சித்தாந்தம், வேதம் முதலிய வற்றை நமக்குத் தந்தருளினர்கள். இத்தகைய ஞானப் பொக்கிஷங்களைப் படித்தால்தான் மனிதன் மனிதனாக வாழமுடியும்.

திறப்புரை வழங்க இருக்கும் அன்பர்திரு இலக்ஷ்மண அய்யர் தொண்டராக, இளைய பெருமாளாக இருந்து பணி யாற்றி வருகிறார். அன்று இராமனுக்கு இலக்ஷ்மணன் தொண்டனாக இருந்து பணிபுரிந்தானே அவ்விதமாக நீதிபதியாக இருந்துகொண்டு சைவ வைணவத்திற்குப்

பணிபுரிகிறார். பயனில் சொல் பாராட்டுதல் பயனில் என்பதை அறிந்தவர். அண்மையில் தமிழ்ப்பணிபுரிந்த வேதநாயகம்பிள்ளையைத் தெரியாதவர்கள் இருக்க மாட்டார்கள். அத்தகைய அவரும் நீதிபதியாக இருந்த தோடல்லாமல் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர் களுடன் தமிழ்ப்பணியும் சமயப் பணியும் புரிந்துள்ளார். அது போலவே இந்த நீதிபதி அவர்களும் சமயப்பணி புரிந்து வருகிறார்கள். அவர்கள் இவ்வகுப்பினைத் தொடங்குவது மிகவும் பொருத்தமானது. பேசு தமிழ்ஞானப் பிரகாசர் குருவருளாலும் செந்தமிழ்ச் சொக்கர் திருவருளாலும் இவ் வகுப்பு இனிது நடைபெறுவதாக.

**திறப்புரை:** திரு. ஆர். இலட்சுமண அய்யர் அவர்கள், எம். ஏ. பி. எல். சப்ஜட்ஜ் & செஷன்ஸ் ஜட்ஜ், குடந்தை.

இன்றைய கோடைக்கால வகுப்பில் தொடங்க இருக்கும் பல சமய தத்துவங்களில் பல ஆசிரியப்பெருமக்களும் மாணவர்களும் பங்கு கொண்டுள்ளார்கள். காளிதாசன் ஓம் என்னும் பிரணவப்பொருளை நன்கு விளக்கியுள்ளார். ஓம் என்னும் பிரணவக்கூட்டில் அன்னை பராசத்தி அடைபட்டு விடுகிறாள். அதில் அ. இ. உ. என்ற மூன்று எழுத்துக்களும் அடங்கியுள்ளன. இதன் உண்மைப்பொருள் அ என்றால் அருள் அறிவு என்றும், இ என்றால் இன்பம் என்றும், உ என்றால் உண்மை என்றும் கொள்ள வேண்டும். அப்படிப் பார்த்தால் மனிதனுக்கு அருள் அறிவு, இன்பம், உண்மை ஆகிய இவைகள் இன்றியமையாது வேண்டப்படுவன. அதே நிலையில்தான் ஆண்டவன் அருள் வழங்குவதாகக் காளிதாசர் ஸ்லோகத்தில் சொல்கிறார். இதைத்தான் வடலூர் இராம லிங்க அடிகள் அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே என்று கூறுகின்றார். இன்னும் இறைவன் பூவாமல் காய்க் காமல் கனியாமல் இனிக்கும் தெய்வம் என்கிறார்.

பெரிய அறிவாளிகளெல்லாம் எங்கே பிறக்கிறார்கள் என்பதை அறிய முடியாது. கல்லில் பிறக்கும் கதிர்மணி, காதலி சொல்லில் பிறக்கும் உயர் மதம் என்றெல்லாம்

சொல்லியவர்கள் நல்லாள் பிறக்கும் குடி எது என்பதே தெரியாது என்று சொல்லி உள்ளார்கள். இதையொட்டித் தான் வள்ளுவர் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்றருளினார். ஆனால் வள்ளுவரையோ அகர முதல என்ற குறளில் உள்ள ஆதிபகவன் என்றதுகொண்டு அவரைப் பற்றிய ஆராய்ச்சி செய்யத் தொடங்கிவிட்டார்கள். பங்கஜம் எங்கு பிறந்தால் என்ன? நமக்கு வேண்டியது தாமரை தானே. எனவே பெருமக்களின் உயர்ந்த இலக்ஷியத்தைக் கொண்டு வாழ்வை வகுப்பதே நமது அடிப்படை.

இன்று சிலர் கல்லுக்குப் பால் அபிஷேகம் எதற்கு என்கிறார்கள். அவர்களுக்கு யான் ஒன்றே ஒன்று கூறுகிறேன். ஒருவர் படத்தை வைத்து அதாவது பண்டிட் நேரு அவர்களின் படத்தை வைத்து அதற்கு மாலை முதலியன போட்டால் அந்தப் படத்திற்காகவா போடப் படுகிறது. நேரு என்று உணர்ந்துகொண்டு அவருக்குப் போட்டது போலத்தானே கருதுகிறார்கள். இதையெல்லாம் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். தனது உருவப் படத்திற்கு அவமரியாதை செய்தால் கோபம் வருகிறது. மரியாதை செய்தால் மகிழ்ச்சி வருகிறது. அதுமாதிரிதானே ஆண்டவனுக்கு உருவம் அமைத்து அபிஷேகிக்கிறோம். எனவே உருவத்தை இறைவன் என்று எண்ணத்தோடு வழிபட வேண்டும். நம்பியவருக்குத்தான் நடராஜா.

இறைவனைப்பற்றிப் பாடிய பெருமக்கள் சில அடையாளங்களை நமக்குக் கூறினார்கள். வெண்ணீறு முதலியன சாதனப் பொருள்களாகும். வெண்ணீறு அணியாதவர்களைப் பார்க்கவே மாட்டேன் என்று வாதவூரர் அச்சப்பத்தில் அருளியுள்ளார். வெண்ணீற்றுக்கும் மேல் சிறந்த சாதனமில்லை. இந்த சமயத்தில் வைணவர்கள் என்மேல் கோபங் கொண்டு பயனில்லை. சிவத்துக்குமேல் சிறந்த தெய்வமில்லை. (சிரிப்பு)

பரமசிவன் நீலகண்டனாக விளங்குகின்றார். விஷத்தை தான் உண்டு நீல கண்டத்தோடு விளங்குவது தெய்வ

நம்பிக்கையை ஊட்டுகிறது. குயில் அழகில்லை. ஆனால் குரல் இனிமையானது. மயில் பார்வைக்கு அழகானது. ஆனால் குரல் இல்லை. இன்று கூட சங்கீதம் பாடுகிற பெண்மணிகள் அழகாயிருந்தால் அவர்களுக்குச் சாரீரம் சரியாக அமைவதில்லை. சாரீரம் சரியாக அமைந்தால் பெண் அழகாக இருக்கமாட்டாள். இரண்டும் ஒருசேர இருப்பது அரிது. ஆகவே ஆண்டவன் விஷத்தை உண்டு மக்கள் உயிர் வாழத் தேவிக்கு அருள் செய்கிறான். தேவியையே இடப் பாகத்தில் கொண்டுள்ளான். அதன் அர்த்தம் என்ன? அன்று காலகாலன் மார்க்கண்டனுக்காக காலனை உதைத்த போது வலது காலால் உதைக்கவில்லையே, இடது காலால் தானே உதைத்தார். இதன் தத்துவம் நமக்கு எதை விளக்குகிறதென்றால் ஆண் அடித்தால் பிழைக்கமாட்டான் பையன், எங்கும் பெண் அடித்துப் பையன் இறந்த செய்தியைக் கேட்டதில்லை. இயமனுக்கு மீண்டும் அருள் செய்ய வேண்டி வரும். இல்லையென்றால் உலகம் (பூமி) தாங்காது என்றுதான் இடதுகாலால் உதைத்தான்.

மக்கள் எல்லோரும் எல்லா உறுப்புக்களுக்கும் நகை அணிந்து கொள்ளுவார்கள், ஆனால் நாக்கிற்கு நகையணிந்து கொள்ளமாட்டார்கள். நாக்கிற்கு அழகு அரன் நாமத்தைக் கூறுதல். நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே என்பது பெரியோர் கொள்கை. இதை யொட்டித்தான் அடியார் பெருமக்கள் அருட்பாக்களைக் கொடுத்துள்ளார்கள். இதைச் சாதனமாகக்கொண்டு அம்பலவாணனை அடைய வேண்டும். இது உண்மையா என்பவர்கள் தருமபுரம், சீகாழி இரண்டும் கூடுமிடத்தில் வழிகாட்டிப் பலகையைப் பார்த்து இது தருமபுரம் போகுமா என்று கேட்டு விட்டு சீகாழி ரோட்டில் போனால் தருமபுரம் வருவது எப்படி? அதேநிலைதான் சமயவாழ்க்கைக்கும் பொருந்தும். இல்லை யென்றால் சீகாழி ரோட்டில் போனவன் போன வழியே போய்க்கொண்டு இருக்க வேண்டியதுதான்.

அப்பரடிகள் ஆண்டவன் அருள் எனக்குக் கிட்டி விட்டது. இனி நாமார்க்கும் குடியல்லோம், நமனையஞ்சோம்

என்று சொன்னார் அவர் நிலை நமக்கு வரவேண்டும். அவரே கல்லில் கட்டிக் கடலில் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சி வாயவே என்றார். ஓரிடத்தில் இறைவன் திருவடியைக் கண்டேன் என்கிறார். எனவே ஒவ்வொருவரும் அவனருள் அடைய அவரவர்களுக்குரிய விதிப்படி நின்று சமயத்துறை யில் பணியாற்ற வேண்டும். அதே நிலையில் கோடைக்கால வகுப்பில் பல தத்துவங்களைப் போதிக்க ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் உங்களுக்கு ஏற்பாடு செய்துள்ளார்கள். இது தமிழகத்திற்கே ஏன் உலகத்திற்கே ஒரு பெரிய வழி காட்டி ஆகும் என்று கூறினார்.

**சொற்பொழிவுகள் :**

பிறகு ஆகமங்கள் 28 என்றும் அனைத்தும் வேதசார மென்றும், இறைவனின் நான்கு முகங்களினின்றும் நான்கு வேதங்களும் ஐந்தாவதான ஈசான முகத்தினின்று ஆகமங் களும் தோன்றியது என்றும் ஆகமங்களில் கோயில் அமைப்பு முறைகளும் தத்துவங்களும் அடங்கியுள்ளன என்றும் வழிபாட்டு முறை பற்றிய விளக்கங்களும் கூறப்பட்டுள்ளன என்றும் ஆகம வகுப்பைத் தொடங்கிய திரு. S. சுவாமிநாத சிவாசாரியார் அவர்கள் கூறினார்கள். அடுத்து சைவசித் தாந்த வகுப்பினைத் தொடங்கிய திரு. முத்து. சு. மாணிக்க வாசக முதலியார் அவர்கள் பதி, பசு, பாசம் என்ற முப் பொருள்களும் என்றும் உள்ள உண்மைப்பொருள்கள். அப்பொருள்களின் இயல்புகளை உள்ளவாறு உணர்த்துவதே சைவசித்தாந்தம். சிவபோகசாரம் என்ற நூலில் 'என்னை' அறிவென்றான் என்ற பாடலால் இதனை விளக்குகின்றார் என்றும் அறிவித்தார்கள்.

இறுதியில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களால் பயிற்சி யாளர்கட்கு சிவபோகசாரமும், சொக்கநாத வெண்பாவும் அளிக்கப்பட்டது. ஸ்ரீமத் மாணிக்கவாசகத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் அருளிய ஆசியுரையைப் படித்து அன்பர்களுக்கு வழங்க இறைவாழ்த் துடன் விழா இனிது முடிந்தது.

452

# பாடக் குறிப்புக்கள்.

---

**ஆகமம் :**

ஆசிரியர், திரு, S. சுவாமிநாதசிவாசாரியாரவர்கள் தருமபுர ஆதீன ஆகம பாடசாலைத் தலைமையாசிரியர்.

**குறிப்புக்கள் :**

**திட்டம்** 1. ஸ்தோத்திரங்கள். (அ) பாலகணபதி, (ஆ) மகாகணபதி, (இ) குருவணக்கம்.

2. ஆகமத்தின் பிறப்பு.

3. ஆகம வகை.

4. சிருஷ்டி.

## 1. ஸ்தோத்திரம் :

(அ) **பாலகணபதி:-** இளம்பிராயத்தர். கதலி, மா, பலா, கரும்பு, விளாங்கனிகளை வைத்திருப்பவர். பாலசூரியப் பிரகாசம் பொருந்தியவர். நான்கு கரங்களையுடையவர், விளாங்கனியைத் துதிக்கையில் வைத்திருப்பவர்.

(ஆ) **மகாகணபதி:-** இடையூறு நீக்குபவர். மூலாதாரம் என்ற ஸ்தானத்திலுள்ளவர். தலையில் குட்டிக்கொண்டு வணங்குதல் விநாயகருக்கு மிகப்பிரியம். வணங்கும்பொழுது இரண்டு முஷ்டிகளிலுமுள்ள நடுவிரல்களால் தலையில் குட்டிக்கொண்டால் பிரம்மரந்திரத்திலுள்ள அமிர்தம் பெருகி வழிந்து மூலாதாரத்தில் சென்று அங்குள்ள மகாகணபதியைத் திருப்தி செய்யும். இதனல் அவர் பக்தனுக்கு அனுக்ரகஞ்செய்கிறார்.

H 5௭

(இ) குருவணக்கம்:- கு - இருள். ரு - நீக்குபவன். குரு - இருள் நீக்கி ஞானம் கொடுப்பவர். அவருக்கு என்றும் வயது பதினாறு. அழகுடையவர். சிரித்த முகத்தர். சின் முத்திரையுடையவர். அறுகுணங்களுடையவர். அவை யாவன: எல்லாம் அறிந்தவர். நித்தியத்திருப்த்தர். அநாதி போதர். சர்வசுதந்திரர். அலுப்தசக்திகர். அநந்த சக்தி யுடையவர்.

## 2. ஆகமத்தின் சிறப்பு :-

கடவுளுடைய ஈசானிய முகத்திலிருந்து பிறந்தது ஆகமம். ஆகமங்களின் பாதங்கள் நான்கு. ஞானபாதம், யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதம். மூன்று பதார்த்தங்கள்;- பதி, பசு, பாசம். மந்திரங்கள் ஐந்து:- 1. ஈசானம். 2. தத்புரு டம். 3. அகோரம். 4. வாமதேவம். 5. சத்தியோ சாதம். பௌஷ்கர ஆகமத்தில் பதார்த்தங்கள் ஆறு எனவும் கூறுவர். பதி, குண்டலினி, மாயை, பாசம், விந்து, ஆன்மா. ஆகமங் கள் இருபத்தெட்டாகும். அவைகளில் சிவபேதம் 10. அவையாவன:- காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம், தீப்தம், சூக்ஷமம், சகஸ்ரம், அம்சுமான், சுப்பிர பேதம், ஒவ்வொன்றையும் கேட்டவர் மூவர். ஆக முப்பதின்மர்.

உருத்திரபேதம் 18, விஜயம், நிஸ்வாசம், சுவாயம் புவம், அநலம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரக் ஞானம், பிம்பம், புரோத்கீதம், லளிதம், சித்தம், சந்தானம் சர்வோக்தம், பாரமேஸ்வரம், கிரணம், வாதுளம் இவற்றை இருவர் வீதம் கேட்டவர் ஆக முப்பத்தறுவர்.

சிவாகமத்தில் பெறப்படும் அட்சரங்கள் ஐம்பது. லகர ளகரங்களைப் பிரித்திடில் 51 ஆகும்.

பௌஷ்கரம் என்னும் உபாகமத்தில் ஞானபாதத்தில் உலக உற்பத்தி காரணம் கூறப்பட்டுள்ளது. சிவத்திலிருந்து

சக்தி, நாதம் சந்திர ஒளியான பிந்து முறையே தோன்றின. பிந்துவிலிருந்து நான்கு சத்திகள் பிரிந்தன. அவை தேஜசுக்கு இருப்பிடமான அம்பிகை என்னும் சக்தியும் அதன் ஆயிரத்தில் ஒரு கூறுன ஜேஷ்டை என்ற இரண்டும் கொம்புபோன்ற வடிவுடையன. மேலும் ஜயா, விஜயா, அஜிதா, அபராஜிதா, நிவர்த்தி, பிரதிஷ்டை வித்யை, சாந்தி, இந்திகை, தீபிகை, ரோசிகை, மோசிகை, அநந்தை, அநாஸ்ருதை முதலிய கலைகளாக விரிந்தன.

ஆண்டவன் ஆன்மாக்களை சக்தியாக சுவரில் அமைத்துள்ளான். சக்தியினிடம் இருந்தே ஐம்பதெழுத்துக்களும் தோன்றின.

ஐம்பதெழுத்தே என்ற திருமத்திரத்தாலறிக. அகரம் முதலிய உயிர்கள் சில எழுத்துக்கள் எனவும், ககாரம் முதலியன சக்தியெழுத்துக்கள் எனவும் பெயர் பெறும்.

## சித்தாந்தம் :

ஆசிரியர், புலவர். திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள்,

தமிழ்ப்பேராசிரியர், ஆதீனப் பல்கலைக்கல்லூரி, தருமபுரம்.

சைவம் - சிவசம்பந்தமானது. சித்தாந்தம் - முடிந்த முடிவு. இறைவன் தமது திருவடியை உயிர்கள் அடையுமாறு கூறியது. வேதநெறி - பொதுநெறி. ஆகமநெறி - சிறப்புநெறி. பொதுநெறி விளங்காதாயின் சிறப்பு நெறி தோன்ருது. வேதமும், ஆகமமும் பொதுவும் சிறப்புமாதலின் மொழி வேறுபாடின்றிக் கற்று ஆன்மலாபம் பெறுக. ஞானத்தைச் சிறப்பாக எய்தும் வழி எதுவோ அதுவே சைவசித்தாந்த நெறி.

**யோகம்:-** ஹடயோகம் - உடம்பை நம் வசப்படச் செய்வது. ராஜயோகம் - பிராணுயாமத்தால் மூச்சை வசப் படுத்துவது. சுவாசமும், சித்தமும் ஒருங்கே அடங்கச் செய்வது இராஜயோகத்தின் ஒரு பகுதி. ஆன்மாவை அறிவது - ஆன்ம அறிவு, ஆன்மயோகம், சிவயோகம் என மூன்று வகைப்படும். சிலர் ஆன்மயோகத்தினேயே (ஆன் மாவை அறியும் அறிவினேயே சிவயோகம் என்று கூறுவது தவறு.) இவற்றைத் திருக்களிற்றுப்படியார் உரையுட் காண்க.

**ஆத்மஞானம் பத்து:-** புத்தி பூர்வபுண்யம், உபாய சரியை, உபாயகிரியை உபாயயோகம், உபாயஞானம், உண்மைச்சரியை, உண்மைக்கிரியை, உண்மையோகம், உண்மைஞானம் ஆக 10. உண்மைஞானம் 10. தத்துவ ரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்ம தரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம் ஆக 10. ஆன்மா அடைவது சிவபோகமே யாகும். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம். அவ்வப்போது தான் பெற்ற அனுபவத்தைப் பிறர்க்குணர்த்தவே நூலாகச் செய்யப்பட்டது. கற்றல், கேட்டல், நினைத்தல், தெளிதல், நிற்றல் என்னும் ஐந்தையும் அறிந்தவர் மிகச்சிலரே. சாத்தி ரங்களைக் கேட்டதிலிருந்தே தொடங்குக. (சிவபோகசாரம்- 128, 15 பாடல்களிற் காண்க. குருவருள் இல்லையேல் திரு வருள் இல்லை. சிவானந்தம் - சிவமாகிய ஆனந்தம். இவ் வானந்தம் அடைந்தவரே பெரியரிற் பெரியார்.

கற்றல் கேட்டல் உடையார் பெரியார் - திருஞான சம்பந்தர் ஊனினைநீக்கி திருமந்திரம். ஆய்வார் பதி, பசு, பாசத்தின் - (தனிப்பாடல்) பதிஞானம் பசுஞானம் என்றும் இவற்றை பதியுடைய ஞானம், பசுவுடைய ஞானம், பாசத்தின் வாயிலாக வரும் ஞானம் எனவே பொருள் கொள்க. கடல் நீர் குடித்துத் தாகம் தணியுமோ - திருக் களிற்றுப்பாடியார்.

[தொடரும்]

## Extracts from the Visitors' Book of

# Sri Panchanathiswaraswami Temple,

## Tiruvaiyaru, Tanjore Taluk & District.

I had the Supreme fortune of visiting श्री धर्माम्बा-समेत पञ्चापगेश्वरः Sri Dharmambasamedha Panchapageswara this morning. The very Darsan induces peace of mind and bliss. The temple is very well kept and the energy and initiative of the temple staff are plainly reflected in the excellent up-keep and splendid maintenance. I am really happy to have visited this high class temple.

(Sd.) G. R. THOTHADRI,
Asst. Examiner of Local Fund Accounts,
Tiruchirapalli.
29—4—54.

To-day I had the privilege of having the Dharsan of Sri Panchanathiswaraswami. I can only say that everything is "Excellent" and in particular the Thevaram songs sung by the students is still ringing in my ears. Dharmapuram Adhinam and its Adhinakarthar should be congratulated for maintaining this ancient temple so nicely. I am greatful to the temple Thambiran and his staff for the nice arrangements they have made.

(Sd.) N. P. SHESHADRI,
5—5—54.
Camp: Thiruvaiyaru.
(General Secretary, National Cultural Organisation to temples.)

H57

# சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையம்

## வேலூர் தேவஸ்தான இறைபணி மன்றத்தில்

# பெரியபுராண விரிவுரை

*11—4—54* ஞாயிற்றுக்கிழமை மாலை $6\frac{1}{2}$ மணிக்கு வித்துவான், திரு. V. S. நடராஜன் அவர்கள் குங்குலியக் கலய நாயனார் வரலாறுபற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். சொற்பொழிவில், கலயர் என்ற பெயரினர், திருக்கடவூரில் அவதரித்தவர். குங்குலியத் தூபமிட்டமையால் குங்குலியக் கலயர் எனப் பெயர் பெற்றார் தாடகையின் அன்பிற்குக் குனிந்த செஞ்சடை வேதியரைத் தமது அன்பால் நிமிரச் செய்தார். ஈவதற்கரிய தாலியையும் தமது உயரிய தூபப் பணியாகிய இலட்சியத்திற்கு ஈந்து இன்புற்றார். இறையருள் பெருகிடப் பெற்றார் என அறிவித்தார்கள்.

*18—4—54* ஞாயிற்றுக்கிழமை மாலை $6\frac{1}{2}$ மணிக்கு வித்துவான், திரு. V. S. தண்டபாணி அவர்கள் மானக் கஞ்சார நாயனார் வரலாறுபற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். நிகழ்த்துகையில், கஞ்சாறூர் என்ற ஊரில் அவதரித்தவர் இப்பெரியார். தொண்டர் தம் குறிப்பறிந்து தொண்டாற்று மியல்பினர், தவமியற்றிப் பெற்ற பெண்ணின் திருமணத் தன்று அம்மணமகளின் கூந்தலைப் பஞ்சவடிக்காகுமெனப் பரமனார் கேட்க, மானக்கஞ்சாறர் மனமுவந்து அளித்தனர். என அறிவித்தார்கள்.

*25—4—54* ஞாயிற்றுக்கிழமை மாலை $6\frac{1}{2}$ மணிக்கு அரிவாட்ட நாயனார் வரலாறுபற்றி வித்துவான், குமார ஞானசம்பந்தம்பிள்ளை அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். ஆற்றுகையில், 'கணமங்கலத்தில் தோன்றியவர்' தாயனார் என்ற இயற்பெயரினர் அரிவாளால் தமது ஊட்டியை அரிந்தமையால் அரிவாள் தாய நாயனார் என்ற பெயர் பெற்றார் செந்நெல் அரிசியுணவு, செங்கீரை, மாவடு முதலிய வற்றை இறைவற்கு நிவேதித்துத் தொண்டு செய்தவர், உயிரைக் காட்டிலும் இலட்சியம் பெரிது என்பதை நாயனார் நன்றாகக் காட்டியுள்ளார் என எடுத்துக் காட்டினார்கள்.

*2—5—54* ஞாயிற்றுக்கிழமை மாலை $6\frac{1}{2}$-மணிக்கு ஆனாய நாயனார் வரலாறு பற்றி வித்துவான், குமாரஞானசம்பந்தம் பிள்ளையவர்கள் விரிவுரை நிகழ்த்தினார்கள். நிகழ்த்துகை யில், இசைத்தொண்டு செய்தவர் ஆனாயர், மழநாட்டிலுள்ள

திருமங்கலத்தில் தோன்றியவர். இடையர் குலத்தினர், பசுவினங்களைப் பண்புற வளர்த்தார், வேய்ங்குழலிசையில் ஐந்தெழுத்தை அமைத்து வாசித்தார். இறையுண்மையை இசை வாயிலாக எடுத்துக் காட்டினார். இசைப்பாரது உள்ளத்தின் வழியே இசை கேட்போருள்ளமும் சாரும்' எனக் குறிப்பிட்டார்கள்.

## ஜயவருஷப் புத்தாண்டு விழா

ஜய வருஷம் சித்திரை மாதம் 1-ம் நாள் 13—4—54 செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்குக் கூட்டம் தொடங்கப் பெற்றது. ஷை சமயப் பிரசார நிலையத் திருமுறை வகுப்பு மாணவியர் கடவுள் வணக்கம் பாடினர். சென்னை, கார்ப்பொரேஷன் கவுன்சிலர் திரு. K. M. சுப்பிரமணியம் அவர்கள் தலைமை வகித்தார்கள். தலைவர் தமது தலைமையுரையில் ஆத்திகத்தால் அளவிலா நன்மைகள் உண்டாகின்றன என்பதை விஜய வருஷத்தாலும், ஜய வருஷத்தாலும் விளங்கிக் கொள்கிறோம். நாத்திகத்தால் நலிவுற்றதைச் சில ஆண்டுகளாகக் கண்டுள்ளோம். ஆகவே இதுபோன்ற ஆத்திக விழாக்கள் வீட்டுக்குவீடு கொண்டாடவேண்டும் என அறிவித்தார்கள்.

சேங்காலிபுரம் பிர்மஸ்ரீ அநந்தராமதீக்ஷிதர் அவர்கள் தமது சிறப்புரையில் அறுபது வருஷங்களும் பிரம்மனுடைய புத்திரர்கள் என்றும், அறுபது பெயர்களும் சுவாமிமலை முருகனைக் குறித்துத் தவஞ்செய்து அறுபது படிகளாகும் பேற்றைப் பெற்றனர் என்றும், பக்தியால் எல்லாவற்றையும் சாதிக்கமுடியும் என்றும் விளக்கிக் கூறினார்கள். பிர்மஸ்ரீ சிரோமணி அரங்கநாதசாரியார் அவர்கள் பஞ்சாங்க படனம் நிகழ்த்திய பிறகு கடலங்குடி பிர்மஸ்ரீ நடேச சாஸ்திரிகள் பஞ்ச அங்கங்களைப்பற்றி விளக்கவுரை நிகழ்த்தினார்கள். திதி, வார, யோக, கரண நக்ஷத்திரங்களைப்பற்றி அறிவிப்பதால் பஞ்சாங்கமெனப் பெயர்பெற்றது. இவைகளைக்கொண்டு அறிவிக்கப்படுகின்ற ஜாதகங்கள் பலன்தருதல் உண்மை. இவற்றை நல்ல ஜாதக அறிஞர்களைக்கொண்டு காண வேண்டும் என உரைத்தார்கள்.

வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் அனைவரையும் வரவேற்று நன்றியுரை நவின்றார்கள். ஷை நிலைய மாணவியர் கடவுள் வாழ்த்துப் பாடலுடன் விழா இனிது நிறைவெய்தியது.

# காட்சியும் கேள்வியும்

புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்
தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம்

## ஒருகூட்டம் வரக்கண்டது :

20—4—54 திங்கள் காலையில் ஒரு கூட்டம் வந்தது. அதைப்பார்த்தபேர்கள், யோசிக்காமல், 'எழுத்தாளர்கூட்டம் இது' என்று தீர்மானம் செய்துவிடலாம். தோற்றம் அளித்தது அது. அத்தீர்மானம் அந்நாட்களின் முன் 3 நாள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பெருஞ்சிறப்புடன் நடைபெற்ற அகில இந்திய எழுத்தாளர் மாநாட்டின் நினைவால் என்று நினைக்கவும் கூடும். அதுபொருத்தம்தான். அந்த நினைவே இல்லாதவர்களுக்கும் அக் கூட்டத்தின் தோற்றம் கவியோ கட்டுரையோ கதையோ நாடகமோ நவீனமோ வேறு யாதோ எழுதும் ஆற்றல் உடையவர் இவர்கள் என்று கருதும்படிச் செய்வதாயிருந்தது. 'அகத்தின் அழகு முகத்தில் (புறத்தில்) தெரியும்' என்னும் பழமொழி பொய்யாகுமோ?

## கூடிவந்த எழுத்தாளர்கள் :

1. ஸ்ரீமான்:- இராஜஅரியரத்நம் அவர்கள், ஆசிரியர் 'ஈழகேசரி' யாழ்ப்பாணம், சிலோன்.
2. ,, கே. கணேசனார் அவர்கள், ஆசிரியர் 'வீரகேசரி' சிலோன்.
3. ,, சிவாநந்தம் அவர்கள், சிலோன்.
4. ,, பரலி. சு. நெல்லையப்பர் அவர்கள், ஆசிரியர் 'லோகோபகாரி' சைதாப்பேட்டை, சென்னை.
5. ,, நாரண. துரைக்கண்ணனார் அவர்கள், ஆசிரியர் 'ஆநந்தபோதினி' 'பிரசண்டவிகடன்', சௌராஷ்டிரநகர், சென்னை 24.

460



6. ஸ்ரீமான். கே. எஸ். வேங்கடராம ஐயர் அவர்கள் (அரவிந்த ஆசிரமம்) 42. வேங்கடாசலமுதலி தெரு, ராயப்பேட்டை, சென்னை.

7. „ புத்தனேரி, கவிஞர், ரா. சுப்ரமண்யம் அவர்கள் கோமளேசுவரன்பேட்டை, சென்னை.

8. „ ஹரிஹரசர்மா அவர்கள், ஹிந்திப்ரசாரசபா, தியாகராஜநகர், சென்னை.

9. ஸ்ரீமதி. சீதாலக்ஷ்மி குமாரசாமி அவர்கள், யோகாசன ஆசிரியை, தண்டையார்பேட்டை, சென்னை.

10. ஸ்ரீமான். நா. இராமசந்திரன் அவர்கள், எழுத்தாளர் சைதாப்பேட்டை, 17. புஜங்கராவ்தெரு, சென்னை.

11. „ ஆக்கூர், அநந்தாசாரியார் அவர்கள், கிட்டப்பா சங்கீதபாடசாலை, தியாகராஜநகர், சென்னை.

இங்கு அவர்கள் பெயர்களை எழுதிய வரிசையில் வைத்து, அவர்கள் பெருமைகளை மதிப்பது கூடாது. எல்லோரும் பலபல வகையில் பெருமதிப்புக்கு உரியவர்களே ஆவார்கள்.

## வந்தவர் மகிழ்ச்சி :

அவர்களில் பலர் தருமபுரம் மடாலயத்திற்குப் புதியர். இருவரே முன்னம் அறிந்தவர்கள். புதியராய் வந்தவர்களைக் காட்டிலும் பழையவர்களுக்கும் புத்துவகை மிகுதியாயிற்று. அவர்கள் எல்லோரும் சேர்ந்து வந்தபோது, தருமை 'ஞான சம்பந்தம்' அச்சகத்துப் பொறுப்பாளர், ஸ்ரீ. பாலநாத ஐயர் அவர்கள், வந்தவர்களை அழைத்துவந்து, மடாலயத்தில் கிடைக்கும் என்று நம்பும் அன்பர்க்கு அத்தியாவசியமான சாந்தம் நிலவும் சாந்தநிலயத்தில் இருக்கச்செய்தார். அவர்கள் இருந்து இளைப்பாறினர்கள்.

461

## உணவும் ஓய்வும் :

பகல் 12½ மணிக்கு உணவு தயாராயிற்று. வந்த இடம் உயர்ந்த இடம், சைவத்திருமடம், திருவருள் கலந்த உணவு பசியைமட்டுமோ போக்கும்? பாசத்தையும் போக்கும். ஆற்றல் மடத்திற்குமாத்திரமோ உண்டு? மடாலயத்தின் துரும்புக்கும் உண்டு என்றால் மடத்தில் துய்க்கும் பொருளுக்கும் பாசத்தைப் போக்கிச் சிவநேசத்தை ஆக்கும் சக்தி உண்டு என்பதில் சந்தேகம் ஏது? உணவுண்ட நண்பர்கள் உணர்வு ஒன்றையன்றி மற்று எல்லாவற்றையும் மறந்து, சைவசமய சம்பந்தமான பேச்சுக்களையே ஒன்றுகூடிப் பேசிக் களிப்புற்றனர். மற்றவர்க்கும் களிப்பு ஊட்டினர். சமயப் பேச்சு சமயப்பேச்சாகவே வாய்த்திருந்தது. அவ்வாய்ப்பு நல்ல பயனை விளைக்கும் அல்லவா? நல்ல பயன் யாது? மாலையில் வந்த சிற்றுண்டி என்ற பெயருடைய பேருண்டியா? அல்ல; அல்ல. அவர்கள் உள்ளத்தில் எப்பொழுது தரிசிப்போம்? தரிசனம் கிடைக்குமோ? கிடைக்காதோ? அதற்குரிய தவம் நமக்கு உண்டோ? இல்லையோ? சிவலோகம் காணப்பெற்றோம். சிவனைக் காணப்பெறாமலிருப்போமோ? அதைக்காட்டிய சிவபுண்ணியம் ஆண்டவனையும் காட்டியுதவும் என்று நிச்சயஞ் செய்துகொண்டனர்.

## ஆலயதரிசனம் :

மாலை 5-மணிக்கு வெளிப்பட்டு, கடன்களை முடித்து, திருநீற்றுப் பொலிவுடன் ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானையும், ஆதி குருமூர்த்திகளையும், தருமபுரீசரையும், மகாலக்ஷ்மி துர்க்காதேவியையும் தரிசித்துப் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள்.

## குருவின் அருளாணை :

இரவு 7-மணி. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

அடியேனை ஏவியருளினார்கள், அவர்களை அழைத்துக் கொண்டு, திருமடத்தின் உள் நுழைந்தேன். அவர்களும், மாயூரத்து நண்பர்கள் சிலரும், நாகை நண்பர் ஒருவரும் உடன்வரும்போது, இம்மடாலயத்தில் நுழையும் தகுதி தங்கட்கு உண்டோ என்றார் ஒருவர். தகுதியை இப்பொழுது இத்தூய இடம் தோற்றியிருக்கின்றது என்றேன். அது கேட்டு, ஒன்றும் பேசாமல் போந்தார். குருமகாசந்நிதானம் வீற்றிருந்தருளும் திருமாளிகைக்கு அருகில் உள்ள ஓரிடத்தில் எல்லோரும் செவ்விநோக்கி இருந்தார்கள்.

## குரு தரிசனம் :

காட்சிக்கு எளியவரும் இன்சொல் அருள்பவரும் ஆகிய எங்கள் குருநாதர் திருவடிகளை வணங்கி, தரிசனத்தின் பொருட்டுச் செவ்விநோக்கும் அறிஞர் இருப்பை விண்ணப்பித்துக்கொண்டேன். முன்னமே அழைத்துவரப் பணித்தவர்களாதலின், விரைந்து கூட்டிவரக் குறித்தருளினார்கள். குறிப்பறியும் ஆற்றல் குறைந்த அடியேனுக்கு அந்தக்குறிப்பு எப்படியோ விளங்கிவிட்டது. உடனே வெளிவந்தேன். அவர்களைக் கூட்டிக்கொண்டு உள் அடைந்தேன்.

## குருவருள் :

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வீற்றிருக்கும் உயரிய இடம் சைவ மடாலயச்சிறப்புக்களுள் முக்கியமான தொன்றைப் புலப்படுத்துவது. அதை அறிவது நல்லது. அது சம்பிரதாயம் அறிந்தவர்க்கே நன்கு புலப்படும். 'ஓங்காரமே நற்றிருவாசி' என்பது உண்மை விளக்கம் என்னும் மெய்கண்ட சாத்திரவாக்கியம். அதன் உண்மையைச் சிவஞானிகளின் திருவுள்ளம் இடைவிடாது சிந்தித்திருக்கும். அங்கு வீற்றிருக்கும் காட்சி சைவநெறியை விரும்புவோர்க்கு மிக்க மகிழ்ச்சியை விளைக்கும். அத்திருவாசிகையிடையில்

462 4642



நம் குருமாமணி வீற்றிருந்தருளக்கண்ட அன்பர் அனைவரும், இது பண்டு கண்டறியாத கவின்மிகு காட்சி என்றும் பிற்பக லெல்லாம் கருத்தைச் சிவநெறியில் வைத்திருந்ததன் பயன் என்றும் எண்ணி, சம்பிரதாயப்படி திருநீறு வாங்கி அணிந்து இன்புற்றார்கள். குருநாதர் அருளாணைப்படி ஒவ்வொருவர்க் கும், தேவாரம், திருக்குறள் உரைவளம் முதலிய வெளியீடு கள் அநேகம் வரிசையாக வழங்கலாயிற்று. தூக்கமுடியாத சுமையாகக்கிடைத்தாலும் புத்தகவேட்கை, பெருஞ்சுமையை அஞ்சாதபடி செய்தது.

## உரையாடல்:

குருமகாசந்நிதானம் அவர்கள், தரிசிக்கவந்த அந்த அன்பர் பலரையும் குசலம் விசாரித்தருளினார்கள். பின்பு, அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் நடந்த மாநாடுபற்றிப் பேச நேர்ந்தது. அப்பொழுது, நம் குருநாதர், திருவருட்சிறப்பை யும் ஆஸ்திகமகிமையையும் நாஸ்திகத்தால் ஆன்மாக்களுக்கும் நாடுகளுக்கும் வரும் நஷ்டங்களையும் தெரிவித்தருளத் திருவுள்ளம் பற்றினார்கள். அடியேனும், திரு. ஷராப். சுப்பையா முதலியார் அவர்களும், திரு. துரைசாமிப் பிள்ளை அவர்களும் வேறு பலரும் அங்கு நின்றிருந்து பெற்ற காட்சி யுடன் கேள்வியிலும் பெரும்பங்கு அடைந்தோம்.

## உபதேசம்:

ஆன்மாக்கள் சமயவாழ்வால் அன்றிவேறு எவ்வாற்றா லும் இன்பம் அடைய இயலாது என்பதற்குத் திருமுறைகளி லிருந்தும் சாத்திரங்களிலிருந்தும் பிரமாணங்காட்டி, அரிய தொரு சொற்பொருட்பெருக்கு நிகழ்த்தியருளினார்கள். அது தனிக்கட்டுரையாகப் பின்வரும். அது கேட்ட நாங்கள் எங்களை மறந்து, திருவருளில் நின்றது வியப்பன்று. வந்த அறிஞர் பலரும் மெய்ம்மறந்து சிவானந்தக்கடலில் மூழ்கி யதும் ஆச்சரியம் அன்று. நம் குருமகாசந்நிதானம் அவர்கள்

சிவமாகி நின்றருளி நல்லோர் சிலர் கூடியிருக்கும் அச்சமயத்தில், பல்லோர் கூடியபேரவையில் ஆற்றும் உயர்வு தோன்றவும் எல்லோரும் பாசப்பொருள் நினைப்பே இன்றிப் பதிப் பொருள் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு, திருவருள் மயமாய் நின்று இன்பமுறவும் செய்ததுதான் மிகமிகப் போற்றத்தக்கதாயிருந்தது.

அவ்வுண்மையை, அந்த அறிஞர்கள் எழுதியகடிதங்கள் உணர்த்துகின்றன. அவற்றையும் பின் பிரசுரிக்கலாம். அக்கேள்வியே அடியேனுக்கு **ஆன்மலாபத்தைக்** கொடுத்தது. மறந்துநின்றேன்.

புத்தனேரி, திரு. ரா. சுப்ரமண்யம் அவர்கள், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைப்போற்றும் பாடலைப் படித்து அளித்து எல்லோரையும் இன்புறச்செய்தார்கள். அவரது நல்ல உள்ளம் எப்பொழுதும் இன்பத்தையே விளைக்கும். ஆதீனத்திலுள்ள புகைப்படம் வல்லார் திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை எடுத்த புகைப்படம் என்றும் அவர்களை நம்மிடையே நிறுத்திவைக்கிறது.

இரவு 8 மணிக்கு உணவு கொண்டனர். **வானைக்** கொணர்ந்து வழியனுப்பப்பெற்றனர். இங்கு ஒன்று சொல்ல விரும்புகின்றேன். அவர்கள் இத்திருமடத்திற்கு வந்து அடைந்தகளிப்பின் பெருக்கை உடன் கொண்டு வந்த பொருள்கள் சோதிக்கத் துணிந்தன. புறப்படும் போது எதிரிலிருந்தும் களிப்பால் தம்மைக்காணுதபடி மறப்பைத் தோற்றி மறைப்பைச் செய்தன. அவை தக்கவர்மூலம் உரியவர்க்கு அனுப்பப்பட்டன. உலகம் மன்னுக. சமயம் வளர்க. உயிர்கள் குறைவிலாது வாழ்க. திருவருளும் குருவருளும் திகழ்க.

---

## *பன்னிரண்டாம் திருமுறையில்

# எங்கும் இன்பம்

வித்துவான், திரு. வை. சுந்தரேச வாண்டையார், திருவையாறு.

ஒருகணப் பொழுதேனும் புலன் ஒன்றித் தன்வயம் இழந்து மகிழ்வது யாது, அது இன்பம் எனத்தகும்.

அவ்வின்பம் பலவகையால் எய்தக்கூடியது. தனது நெடுநாளைய விருப்பம் அரிது முயன்று பெறக்கூடியது இறுதிவரை கிடைக்காமலே அதுபோயினும் போகும். அப் பொருள் தனது முயற்சி சிறிதுமின்றியே கைவரப்பெறு வானாயின் அவன் மனதில் நிகழ்வது ஓர் இன்பம். அணி இலக்கணமுடையார் இன்ப அணிக்குக்கூறும் இலக்கணமும் இதுவே.

வள்ளுவனார் அதனை உடற்கின்பம் செவிக்கின்பம் (மக்கள் மெய்தீண்டல்) அறத்தால் வரும் இன்பம், இன்னா மையாகிய இன்பம், விழையத்தகாத இன்பம் எனப் பல வகைப் படுத்துக்கூறுவர்.

அவ்வின்பம் பற்றிப் பலரும் பலகூறுவர். அவற்றை யெல்லாம் விட்டு நமது மணிவாசகப்பெருமானார் கூறும் துறைக்குவருவோம். அவர் கூறுவது இன்பத்தின் தரம் குறித்தால்—பல ஏணிப்படிகளாக அதனின் மற்றது மிக்க இன்பம், மற்றதில் பிறிதொன்று மிகமிக இன்பம் என இப்படியே பல தரத்தில் உயர்ந்து கொண்டேபோகும். அத் தகைய பலநிலைமைகளை எல்லாம் கடந்து உயர்ந்த இன்பம் ஈறிலாத இன்பம். அவ்வின்பவடிவே இறைவனின் வடிவம் என்பார் "ஈறிலாப்பதங்கள் யாவையும் கடந்த இன்பமே" என்கிறார்.

---

* 15—4—54ல் சீகாழியில் திருமுறை மகாநாட்டில் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.

4.66



இனி அவ்வின்பத்துறையை அடைதற்குவழி அன்பு நெறி ஒன்றே என்பார்.

"ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே
என்னுடை அன்பே"

என்றுங்கூறினர். ஆகவே அன்பு, அதனால் அடையலாகும் இன்பு, அவ்வின்பமயமான இறை இம்முப்பொருளும் ஒன்றின் ஒன்று பிரிக்கப்படாத பொருள்களாம்.

இதனையே நாம் எடுத்துக்கொண்ட பன்னிரண்டாம் திருமுறையில் காண்கின்றோம். காரைக்கால் அம்மையார் புராணத்தில்,

இறவாதஇன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டு நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

என்பதாம்.

எனக்குக் கொடுக்கப்பட்ட தலைப்பில் பன்னிரண்டாம் திருமுறையில் எங்கும் "இன்பம்" — என்றுள்ளதே. இக் குறிப்பை எங்குக் கண்டுபிடிப்பது என்று துருவினேன். தேடிக் கண்டுகொண்டேன். எங்கே? அப்பன்னிரண்டாம் திருமுறையிலே சேக்கிழார் நாயனர் திருக்கடைக்காப்புப் போலத் திருவாய் மலர்ந்தருளிய பாசுரத்தில்

என்று மின்பம் பெருகு மியல் பினல்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடியா ரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்

என்பதாம். இங்கே என்றும் இன்பம் என்பது ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பம் என்றதையும் இறவாத இன்பம் என்பதையும் ஒப்பு நோக்கத்தக்கது.

மன்றுளார் அடியார் அன்பர்கள் என்றும் இன்பம் பெருகும் இயல்பினேடு ஒன்று காதலித்துள்ளமும் ஓங்கும் வண்ணம் வான்புகழ் பெற்றவர்கள். அவர்புகழ் உலகெலாம் நிலவி எங்கும் நின்றது.

467

பன்னிரண்டாம் திருமுறையில் எங்கும் இன்பம் அன்பராகிய அடியார் புகழோடு இணைந்து கிடக்கிறது. இன்னது நேருமென்று எதிர்பாராத நிலையில் எய்துவது பெரிய இன்பமாம். திருவெண்ணெய்நல்லூர்க்கு, வேண்டாவெறுப்பாய் ஐயரைத் தொடர்ந்து சென்ற நம்பியாரூரர்

என்றெழும் ஓசைகேளா ஈன்ற ஆன்கனைப்புக் கேட்ட
கன்றுபோல் கதறி நம்பி கரசரணுதி அங்கம்
துன்றிய புளகம் ஆகத் தொழுதகை தலைமேலாக
மன்றுளீர் செயலோ வந்துவலிய ஆட்கொண்டதென்றூர்.

இங்கே அன்பு, அதன் வழித்தாகிய இன்பம், அவ்வின்ப வடிவான இறைவன் மூன்றும் ஒரே மயமாகத்தோன்றுவதைக் காண்மின்,

அவ்வாறே இன்னது நேருமென்றறியாது திருவதிகையில் வைகறையில் தமக்கையாரைத் தொடர்ந்து சென்ற நாவரசர் முன்னின்ற தெருட்சி மருட்சியினுல் முதல்வன் கருணைக்கடல் மூழ்கியபோது.

மன்னும் பதிகம் பாடியபின் வயிற்றடு
சூலை மறப்பிணி தான்
அந்நின்ற நிலைக்கண் அகன்றிடலும் அடியே
னுயிரோட ருள்தந்த தெனச்
செந்நின்ற பரம் பொருளான வர்தம்
திருவருள் பெற்ற சிறப்புடையோர்
முன்னின்ற தெருட்சி மருட்சியினுல் முதல்வன்
கருணைக் கடலில் மூழ்கினரே.

இங்கே முன்னின்ற தெருட்சி மருட்சியினுல் முதல்வன் கருணைக்கடல் மூழ்கியபோது எய்தியதும் பெரிய இன்பம்.

இவ்வாறே தந்தையாரோடு பிரமதீர்த்தக் கரையடைந்த திருஞானசம்பந்தப் பெருமான் இன்னது நேருமென்று அறியாது

எண்ணரிய சிவஞானத்தின்ன முதங் குழைத் தருளி
'உண்ணடிசில்' என ஊட்ட உமையம்மை எதிர்நோக்கும்
கண்மலர் நீர்துடைத் தருளிக் கையிற் பொற்கிண்ணமளித்
தண்ணலை அங்கழுகைதீர்த் தங்கணனுர் அருள் புரிந்தார்.

H68



அப்பொழுது அடைந்தது பெரும்பேரின்பமேயாகும். இது போன்று பன்னிரண்டாந் திருமுறையில் எதிர்பாராத வகையில் எய்தக்காண்பது எங்கும் இன்பமே.

1. இளமுலைமாதர் வளமை துறந்த போதும்
2. பெற்ற அடைக்கலப் பொருளைக் காணாத இடத்தும்
3. மணமகள் கூந்தல் களைந்த இடத்தும்
4. தந்தை தாள் தடிந்த இடத்தும்
5. பூக்கொளுமாதர் மூக்கினையும் கையையும் அறிந்த இடத்தும்
6. கண்ணைத் தோண்டிய இடத்தும்
7. குலத்துக்கு ஒரு மகன் என்பது அறிந்தும், அவனைக் கொலைசெய்த விடத்தும்
8. பச்சிளங் குழவியை அறுத்துக் கறிசெய்த இடத்தும்
9. சிவனைத்தூது போக்கினவன் முகத்தில் விழிப்பதா என்று தற்கொலை செய்த விடத்தும்
10. பாலகன் பாம்பால் உயிர் துறந்த இடத்தும்.

இன்னும் பிற இடங்களிலும் இவையெல்லாம் துன்பங் காணற்கு உரிய இடமன்றோ? இவ்விடத்தும் இன்பமே காணப்படுகிறது. அவ்வின்ப அன்பின்பெருக்கால் விளையும் இன்பம் இன்ப வடிவினனாகிய இறைவனோடு எழும் இன்பம்,

ஆகவே அன்பர்களே! பன்னிரண்டாந் திருமுறையில் எங்கும் இன்பம் என்பது இன்பம் விளையும் நிலத்தன்றித் துன்பம் விளையும் நிலத்தினும் ஆகிய எல்லா இடங்களிலும் இன்ப நிகழ்ச்சி காண்கின்றோம். ஆகலின் எங்கும் இன்பமே. அவ்வின்பமும் மறுகணத்து அழிவதாகிய இன்பமன்று. என்றும் நிலைப்பது. நிலைப்பது மட்டும் அன்று. அது என்றும் பெருகுவது. ஆகவே நான்முடிவாகக் கூறுவது பன்னிரண்டாந் திருமுறையில் காண்பது எங்கும் இன்பம். அது மட்டுமல்ல; அது என்றும் பெருகிவளரும் இன்பம். என்பது சேக்கிழார்பெருமான் கண்டமுடிவு.

# சீகாழி திருமுறை மாநாட்டில்

## நிகழ்த்திய தலைமையுரை.

## 13—4—54-ல்

சீகாழி, பெருமிலக்கிழார், திரு. C. இராமனுத முதலியார் அவர்கள்

### எட்டாந் திருமுறை:

திருக்கைலாயத்திலே - ஒருமுகம், இருபதம், முக்கண், நாற்புயம், நீலகண்டம் சடாமுடி முதலியன விளங்குகிற ஸ்ரீகண்டருத்திர சிவரூபமாகிய சிவன் ஆணைமுழுதும் நடாத்தி, அரி பிரமன் இந்திரன் முதலிய தேவர், தம்மையே முதலில் வணங்கிவேண்ட அவர்களைச் சமயம் நோக்கி உள்ளே செலுத்தியும், வெளிவரச் செய்தும் வருகின்ற அதிகாரம் பெற்று முதற்கோபுரவாயிலில் வீற்றிருந்தருள்கின்ற திருநந்திதேவரே திருவாசகம் கூறிய மணிவாசகர்.

சிவபிரான் இவரைப் பூமிக்கு அனுப்பி, பரசமய நிராகரணமும் சைவசமய ஸ்தாபனமும் செய்விக்கத் திருவுளங்கொண்டருளி, ஒரு சமயம் அங்கு வந்த தேவர்களை உள்ளே அனுமதிக்காமல் அனுவசியமாகக் காலங்கடத்தினர் என்ற குற்றங்காட்டி, நீ மானுடனுய்ப் பூமியிற் செல்க, நாம் அங்கு வந்து உனக்கு அருள் செய்வோம் என்று ஆஞ்ஞாபித்தார். அவ்வாணைப்படியே திருவாதவூரில் சிவப்பிராமணர் குலத்தில் சம்புபாதாசிரயரும் அவரது மனைவி சிவஞானவதியம்மையாரும் செய்த அருந்தவத்தால் அவர்களுக்குப் புத்திரராய்த் தோன்றி வேதாகமாதி சகலசாஸ்திரங்களையும் கற்றுத் திருவருள் விளக்கம் பொலியவிளங்கினர். அரிமர்த்தன பாண்டியன் இவரைப்பற்றிக் கேள்வியுற்று அழைத்துவந்து 'தென்னவன் பிரமராயன்' என்னும் பட்டமும் கொடுத்துத் தனக்கு முதன் மந்திரியாக்கிக் கொண்டான். இவர் அரசகாரியத்தில் கண்ணுங்கருத்துமாய் இருந்து வருங்காலத்திலேயே

4205



"கரவிலாத பேரன்பினுக் கெளிவருங் கருணைக்
குரவனார் அருளின்றி இக்கொடிய வெம்பாசம்
புரையில் கேள்வியாற் கடப்பது புணையினலன்றி
உரவு நீர்க்கடல் கரங்கொடு நீந்துவதொக்கும்"

என்பதை உணர்ந்து நடந்து வருகையில் அரிமர்த்தன பாண்டியனுக்குக் குதிரை வாங்குதற்காக வேண்டிய திரவியம் எடுத்துக் கொண்டு போகிறவர் சோமசுந்தரக் கடவுளின் சந்நிதியிற் சென்று

"ஒன்று வேண்டும் இப்பொருளெலாம் உமக்கும் ஐம்பொறியும்
வென்று வேண்டும் நின் அன்பர்க்கும் ஆக்குக வெள்ளி
மன்று வேண்டி நின்றாடிய வள்ள லென்குறையீது
என்று வேண்டி நின்றேத்துவார்க் கிறைவன் இன்னருள்போல்"

என்று விண்ணப்பிக்க ஒரு அர்ச்சகர் வந்து விபூதி கொடுத்தார். இதை ஒரு நன்னிமித்தமாகக் கொண்டு செல்கின்றவருக்கு சிவபெருமான் அருள் செய்யவேண்டி அங்கு வந்திருந்து அருள் செய்ததும், அவ்விறையருள் பெற்று இவர் பாடியது முதலாக உள்ள மற்றைய வரலாறுகளைக் கூறப் புகுந்தால் மிகவிரிவாகு மாதலாலும் மற்றவர்களுடைய பிரசங்கங்களைக்கேட்க வேண்டியிருப்பதாலும் திருவாசகத்தின் பெருமையைப் பற்றி ஒரு செய்யுள் கூறி முடித்துக் கொள்ளுகிறேன்.

"விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர் வாய்ப் பிறந்த வாசகத்தேனோ
யாதோ சிறந்தது என்குவீராயின்
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக்குருகி நிற்பவர்க் காண்கிலேன்
திருவாசகம் இங்கு ஒரு கால்ஓதிற்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்து நீர்பாய

> மெய்ம்மயிர் பொடிப்ப விதிர் விதிர்ப்பெய்தி
> அன்பர் ஆகுநர் அன்றி
> மன்பதை யுலகின் மற்றையர் இலரே"

## 14—4—54

**ஒன்பதாந் திருமுறை:**

இனி 9-ந்திருமுறையாகிய திருவிசைப்பா திருப்பல்லாண்டு என்பன. இதனை இயற்றியவர்கள், திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர் முதலிய ஒன்பதின்மர் ஆவர். அவர்களில் சேந்தனார் என்பவர் பட்டினத்தடிகளின் நாங்கூர் கிராமத்தில் அவருடைய காரியஸ்தராக இருந்தார். பட்டினத்தார் துறவுபூண எண்ணங் கொண்டபோது தம்முடைய ஆஸ்திகள் நாங்கூரில் இவர் மேற்பார்வையில் இருப்பவற்றை எல்லாம் இவர் இஷ்டப்படியே சிவதர்மச் செலவு செய்ய உத்தரவிட்டார். இவர் அப்படியே செய்து விட்டார். பிறகு பட்டினத்தாரின் உறவினர் அரசனிடம் சென்று சேந்தனார் நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டார் என்று முறையிட அரசன் சேந்தனாரை விலங்கிட்டுச் சிறையிலிட்டான். சேந்தனார் பட்டினத்தாரை நினைக்கப் பட்டினத்தார் திருவருளை வேண்டி

> "மத்தளை தயிருண்டானு மலர்மிசை மன்னினானும்
> நித்தமுந் தேடிக்காணா நிமலனே அமல மூர்த்தி
> செய்த்தலைக் கயல்பாய் நாங்கூர்ச் சேந்தனை வேந்தனிட்ட
> கைத்தளை நீக்கி என்முன் காட்டுவெண் காட்டுளானே."

என்று தோத்திரிக்கவும் சிவபெருமான் தமது மூத்த குமாரரான விநாயகரை ஏவிச் சேந்தனாரைச் சிறை மீட்டுக்கொண்டு வந்தார். இப்போதும் அவ்விநாயகருக்கு "விலங்கு தறித்த" விநாயகர் எனப் பெயர் வழங்குகிறது. இதுபோல் மற்றவர்களுடைய சரிதமும் தெய்வத் தன்மை வாய்ந்ததாகவே இருக்கும்.

**பத்தாந் திருமுறை:**

இனி 10-ம் திருமுறை ஆசிரியராகிய திருமூலருடைய வரலாற்றைக் கூறும்போது சேக்கிழார்

"நந்தி திருவருள்பெற்ற நான்மறை யோகிகள் ஒருவர் அணிமாதி வரும் சித்தி பெற்றுடையார், திருக்கயிலை மலையி னின்று குறுமுனிபால், உற்றதொரு கேண்மையினுல் உடன் சில நாள் உறைவதற்கு, நற்றமிழின் பொதியமலை நண்ணு தற்கு வழிக்கொண்டார்"

எனக் கூறினுரே ஒழிய மற்ற நாயன்மார்களுக்குக் கூறியதுபோல் பிறப்பு, வளர்ப்பைக் கூறவில்லை.

திருவாவடுதுறையில் கூடுவிட்டுக் கூடுபாயும் தமது சித்து விளையாட்டைக் காட்டியபிறகு சமாதிநிலையிலிருந்து வருஷம் 1-க்கு ஒரு செய்யுளாக 3000 செய்யுள்களாக 10-ந் திருமுறையாகிய "திருமந்திரத்தை"ப் பாடியுள்ளார்.

**பதினொரந் திருமுறை:**

இப் பதினோராந்திருமுறையானது சிவபெருமான் "மதி மலி புரிசை மாடக்கூடல்" எனத்தொடங்கி பாணபத்திர ருக்கு எழுதித்தந்த "திருமுகப்பாசுரம்" முதலாக நம்பி யாண்டார் நம்பிகள் அருளிச்செய்த 'திருநாவுக்கரசு தேவர் திரு வேகாதசமாலை' இறுதியாக உள்ள பிரபந்தங்களாகும்.

சிவபெருமான் தமது திருமுகப்பாசுரத்தில் "ஆலவாயில் மன்னிய சிவன்யான்" பாணபத்திரன் தன்போல் என்பால் அன்பன் மாண்பொருள் கொடுத்து வர விடுப்பதுவே" என சேரருக்காக எழுதித்தந்தமையிலிருந்து பாணபத்திரரும், சேரரும் சவுந்திரபாண்டியனுயிருந்து அரசாக்ஷி செய்தருளிய சோமசுந்தரக் கடவுளிடத்தில் கொண்டுள்ள பக்திப்பெருக்கை விளக்கும்.

இரண்டாவது காரைக்காலம்மையார் அருளிச் செய்த 'திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்'.

மூன்ருவது ஐயடிகள் காடவர்கோன் நாயனுர். இவர் நாயன்மார்களில் ஒருவர். "இவர்பாடியது க்ஷேத்திரத் திரு வெண்பா"வாகும்.

நான்காவதாக சேரமான்பெருமாள் நாயனார். சுந்தரருடன் குதிரையில் ஏறி கைலைக்குச் சென்றவர் சிவபெருமான் இவருடைய பக்திப் பெருக்கினால் பாடிய ஞானவுலாவைக் கேட்டு மகிழ்ந்து தமது கணங்களுக்குத் தலைமைப் பதவி நல்கினார். இவர் பாடியவை 'பொன்வண்ணத் தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கைலாய ஞானவுலா வாகும்.

ஐந்தாவது நக்கீரதேவர். இவர்பாடியது, கைலைபாதி காளத்திபாதி அந்தாதிமுதலிய 10 பிரபந்தங்களாகும்'. இவர் சிவபெருமானைக் குறித்து 'சங்கறுப்பது எங்கள் குலம்' சங்கரற்கு ஏதுகுலம் பங்கமுறப்பேசில் பழுதாமோ — சங்கை அரிந்துண்டு வாழ்வோம் அரனாரைப்போல இரந்துண்டு வாழோம் இனி' என்று நிந்தாஸ்துதியாக பாடிய பாட்டாலும் எல்லோரும் ஓதியுணர்ந்து போற்றக்கூடிய திருமுருகாற்றுப்படை'' முதலிய பிரபந்தங்களாலும் அறியலாம்.

ஆறுவதாக கல்லாடனார். இவர் செய்தருளியது 'திருக் கண்ணப்ப தேவர் திருமறம்'.

ஏழாவது கபிலதேவர். இவர் அருளியவை மூத்தநாயனார் திரு இரட்டைமணி மாலை, சிவபெருமான் திரு வீரட்டைமணி மாலை, சிவபெருமான் திருவந்தாதி ஆகிய மூன்றும்ஆகும்.

எட்டாவது பரணதேவர் அருளிச்செய்த சிவபெருமான் திருவந்தாதியில் உள்ள செய்யுட்களும் கவனிக்கத்தக்கன.

ஒன்பதாவது இளம்பெருமான் அடிகள் இயற்றிய 'சிவபெருமான் திருமும்மணிக்கோவை.'

பத்தாவது அதிராவடிகள் அருளிச்செய்த 'மூத்த பிள்ளையார் திரு மும்மணிக்கோவை.'

பதினொன்றாவது பட்டினத்துப் பிள்ளையார் அருளிச் செய்த 'கோயில் நான்மணிமாலை' திருக்கழுமல மும்மணிக் கோவை' ஆகிய 5 பிரபந்தங்களாகும்.

இனி 12-வது நம்பியாண்டார் நம்பிகள் அருளிய 'விநாயகர் திருவிரட்டைமணி மாலை' ஆதியாக 'திருநாவுக் கரசு தேவர் திருவேகாதசமாலை' இறுதியாகவுடைய 10 பிரபந்தங்களாகும்.

424



15—4—54

## பன்னிரண்டாந் திருமுறை :

"செயற் கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற் கரிய செய்கலாதார்"

திருவள்ளுவ நாயனார் கூறியபடி வேதநெறி, சைவநெறி, பத்திநெறி, வழாது வாய், மெய், சிந்தை, தான் அரனடிக்கே செலுத்தினராய்ச் சிவானுபவச் செல்வராகிப் பந்தமாந் தொடக்கறுத்த திருத் தொண்டர்களுடைய சிறந்த வரலாற்றைக்கூறும் நூலாதலால் இதற்குப் பெரியபுராணம் எனப்பெயர் வழங்குகிறது. இவர்களில் சிலர் இல்லறத்திலும் சிலர் துறவறத்திலும், சிலர் பிரமசரிய நிலையிலும் நின்றும், சிலர் குரு உபதேசம் பெற்றும், சிலர் சிவபூஜை செய்தும், சிலர் சிவனடியார்களை வழிபட்டும், சிலர் திருத் தொண்டு செய்தும், பிறவிப் பெருங்கடல் நீந்தி இறைவனடி சேர்ந்த பெரியார் ஆவர்.

சுந்தரர் விண்ணப்பித்துக் கொண்டதற்கிணங்க சிவபெருமான் 'உலகெலாம்' என்ற ஒரு அருள்வாக்கால் அசரீரியாக உணர்த்த அதையே முதலாகக்கொண்டு பாடியருளினார். திருக்குறளைப் போலவே இதில் அமங்கலமான சொற்கள் கிடையா. 'தான்முன்நினைந்த அப்பரிசே செய்ய' 'முன்னின்ற பாதகனும் தன் கருத்தே முற்றுவித்தான்' (எனாதி 40) எனக் கூறப்பட்டவை கவனிக்கதக்கது. இப்பெரிய புராணமானது சொல்நடையிலும் பொருள் சிறப்பிலும் மேம்பட்டு விளங்குகிறது.

சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்தை அரங்கேற்ற காலம் இடம் முதலியவற்றை மகாஜனங்களுக்கு அறிவித்து குலோத்துங்க சோழன் தனது நால்வகைப் படையுடனும் திருத்தில்லையடைந்து சிற்சபையின்கண் தில்லைவாழ்அந்தணர், திருமடத்தலைவர், சிவனடியார், மாதவர் இறைவன் முதலிய எல்லோரும் கூடி மகிழ்ந்திருக்கிறபோது "சேக்கிழான் நமது தொண்டர்சீர் பரவ, நாம் மகிழ்ந்து உலகம் என்று நம், வாக்கினால் அடி எடுத்து உரைத்திட வரைந்து நூல் செய்து முடித்தனன்" என்றார். எல்லோரும் ஆனந்தமடைந்தனர். இம்மாநாட்டில் தலைமைவகிக்க வாய்ப்பளித்த ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்துக்கு என்வணக்கமும் நன்றியும் உரியது.

துறைசை, தருமை

# ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானங்களின்

# சீகாழி விஜயம்

10—4—54 சனிக்கிழமை வேதநெறிதழைத் தோங்கக் காழியம் பதியில் கவுணியர் பெருந்தகை சிவஞானப் பாலுண்ட சிறந்தநந்நாள்.

ஆளுடையபிள்ளையார் மூன்று வயதில் தந்தையாருடன் தானும் வருவேன் என்று பிரமதீர்த்தக்கரைசென்று இருந்து நீரில் மூழ்கிய தந்தையாரைக்காணாது அம்மையே அப்பா என அழ தோணியப்பர் தேவியாரும் தானுமா யெழுந்தருளி சிவஞானப்பால் வழங்கி ஞானசம்பந்தராக்கிய நற்காட்சி.

இத்தகைய அற்புதக் காட்சியைத் தரிசிக்க திருவாவடுதுறை ஆதீனம் 21-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் எழுந்தருளினார்கள்.

வளைவுத் தட்டிகளும் பந்தலலங்காரங்களும் மகுட தோரணங்களுமாகக் கட்டளை மடம் அலங்காரம் செய்யப் பெற்றிருந்தது. துறைசை மகாசந்நிதானம் அவர்களும் தருமை மகாசந்நிதானம் அவர்களும் கட்டளை மடத்திற்கு காலை 11-மணி அளவில் எழுந்தருளினார்கள். ஆதீனச் சார்பில் பூரணகும்பங்களுடனும் கோயில் மரியாதைகளுடனும் வரவேற்பளிக்கப்பெற்றது.

இரு குருமூர்த்திகளும் கொலு வீற்றிருந்து அருட்காட்சி வழங்கினார்கள். சீகாழி நகரப் பிரமுகர்களும் பெருநிலக் கிழார்களும் வந்திருந்து தெரிசித்தனர், சீகாழி தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத். மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தேவஸ்தானச் சார்பில்

476



துறைசை மகாசந்நிதானம் அவர்களுக்கு வரவேற்புரை ஒன்றை வாசித்தளித்தார்கள். தேவஸ்தானத் தேவாரவகுப்பு மாணவ மாணவிகளால் துறைசை மகாசந்நிதானம் அவர் கட்கு ஒரு வரவேற்புரை வாசித்தளிக்கப்பெற்றது. சீகாழி திருஞானசம்பந்தர் கழகச் சார்பில் நகரப் பெருநிலக்கிழார் திரு. C. இராமநாத முதலியார் அவர்களும் காழிச் சைவப் பெருமக்கள் சார்பில் திரு. S. பாலசுப்பிரமணியப் பிள்ளை திரு. ரெத்தினசபாபதிப் பிள்ளை அவர்களும் வரவேற்புரைகள் வாசித்தளித்தனர். வந்திருந்தோரனைவரும் திருநீற்றுடன் திருவருளும் பெற்றுய்ந்தனர்.

பின்னர் மகாசந்நிதானங்கள் ஆலய தரிசனத்திற்கு எழுந் தருளினார்கள். ஞானசம்பந்தர் ஆலயத்திற்குச் சென்று ஞானசம்பந்தரை பிரமதீர்த்தக்கரைக்கு எழுந்தருளச்செய்து உடன்வந்தார்கள், ஆலயம் ஜனவெள்ளத்தால் நிரம்பி யிருந்தது. இரு குருமூர்த்திகளும் அம்மையும் அப்பனும் ரிஷபாரூடராய் எழுந்தருளி வந்து ஞானசம்பந்தருக்குச் சிவ ஞானப்பால் அளித்தருளிய காட்சியைக்கண்டு களித்தார்கள். திரளானமக்களின் பக்திப் பெருவெள்ளத்திலே மிதந்தருளிய பெருமான் ஞானசம்பந்தராகிய குழந்தைக்கு மட்டுமல்ல எல்லோருக்குமே சிவஞானப் பாலளித்து அருள்வழங்கினான். சுவாமி, அம்பாள், சம்பந்தர் ஆகிய மூர்த்திகளுக்குப் பட்டுப் பரிவட்டங்கள் சார்த்தப்பெற்றன. இரு குருமூர்த்திகளும் வழிபாட்டிற்குப் பின் வேளூருக்கு எழுந்தருளினார்கள்.

சீகாழியில் நடுப்பகலில் மாகேசுவரபூஜை சிறப்பாக நடைபெற்றது. ஏழைமக்கள் அனைவருக்கும் உணவளிக்கப் பெற்றது.

மாலையில் தருமபுரம் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவியைத் தரிசித்துக்கொண்டு துறைசை மகாசந்நிதானம் அவர்கள் திருவாவடுதுறைக்கு எழுந்தருளினார்கள்.

# ஆதீனத்திலும், ஆதீன தேவஸ்தானங்களிலும் :

## சீகாழியில் தேவார வகுப்பு ஆண்டுவிழாவும், திருமுறை மாநாடும்

**9—4—54**

சீகாழி சட்டைநாதஸ்வாமி தேவஸ்தானம் தேவார வகுப்பு 4-வது ஆண்டு விழா குடந்தை சப் ஜட்ஜ் திரு. R. லக்ஷ்மண ஐயர் அவர்கள் M. A, B. L., தலைமையில் நடைபெற்றது. சீகாழி கட்டளை விசாரணை வித்துவான், ஸ்ரீமத் மாணிக்கவாசகத்தம்பிரான் சுவாமிகள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்கள். தேவார வகுப்பு மாணவ மாணவிகளின் அபிநயமும், கும்மி கோலாட்டங்களும் நடைபெற்றன. ப்ரகதா, பர்வதம் என்ற இரு மாணவிகள் திருமுறைபற்றிய உரையாடல் நிகழ்த்தினர். சீகாழி திரு. K. சுப்ரமண்ய ஐயர் B. A., அவர்கள் "இன்பம் பெறுக" என்பதுபற்றிப் பேசினார்கள். மாணவ மாணவியர்கட்குப் பரிசுகள் வழங்கப்பெற்றன.

சீகாழி சட்டைநாதஸ்வாமி தேவஸ்தானம் ஸ்ரீ திருநிலை நாயகி அம்பாள் சமேத ஸ்ரீ பிரமபுரீஸ்வரசுவாமி பிரமோற்சவத்தை முன்னிட்டு நிகழ்ந்துவரும் திருமுறை மாநாடு 10-ந்தேதி முதல் ஆரம்பிக்கப்பட்டது. அவைத் தலைவர் ஸ்ரீ சி இராமநாத முதலியார் அவர்கள்.

திறப்பாளர், திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டமான் அவர்கள் (Asst. to the Special Officer Tanjore Dt., Board) நம் தமிழ்நாட்டுக் கலைப்பண்பைப் பாதுகாப்பது மக்களின் கடமையாகையால் அவர்கட்கு நற்றமிழ்வல்லஞான சம்பந்தன் போன்றோரது நறுமணம் வீசும் இன்னிசைப் பாடல்களைப் பாடுவிப்பதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

வாகீசகலாநிதி, சென்னை, கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் 'உள்ளங்கவர்கள்வன்' என்பது பற்றிப் பேசுகையில் 'தோடுடைய செவியன்' என்றபதிகத்தில்

H78



தோ என்ற முதல் எழுத்து வடமொழி தென்மொழி இனிது இயைந்த ஓங்காரப் பரம்பொருளை உய்த்துணர்ந்து ஞான சூரியஞன-சம்பந்தர், மக்களுக்கு அப்பொருளின் இலக்கணத்தை அருளியதையும், அண்ணுமலைப் பல்கலைக் கழகம் தமிழ்த் துறை ஆராய்ச்சியாளர் வித்துவான், திரு. க. வெள்ளை வாரணஞர் 'குழந்தை உள்ளம்' என்பது பற்றியும் ரிடையர்டு கமர்ஷியல் டாக்ஸ் ஆபீஸர் திரு. எம். கிருஷ்ண முதலியார் 'ஆட்பாலவர்க்கருளும் வண்ணம், என்பது பற்றியும் பேசினர்.

*11*-ந்தேதி 'ஒன்று உண்டு விண்ணப்பம்' என்பது பற்றி திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரித் தலைவர் திரு. கே. எம் வேங்கடராமையாவும் 'வேதநாயகன்' என்பது குறித்து திருநள்ளாறு கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் ஸ்வாமிகளும், தாண்டக வேந்தர் என்பது பற்றி காஞ்சி வச்சிரவேல் முதலியாரவர்களும் சொற்பொழிவாற்றினர்,

12-ந் தேதி ஏழாம், எட்டாந் திருமுறைகள் சம்பந்தமாய் "பொன்னும், மெய்ப்பொருளும்" பற்றித் தருமை முத்து சு. மாணிக்கவாசக முதலியாரும், 'பால்நினைந்தூட்டும் தாய்.' பற்றி, வித்துவான் மு. சுந்தரேசம் பிள்ளையும், 'கோவையாரின் சிறப்புப் பற்றி' சென்னை எஸ். வி. வரதராஜ ஐயங்காரும் பேசினர்

13-ந் தேதி ஒன்பதாந் திருமுறை நாளன்று 'மணிவாசகரும் திருவாசகமும்' என்னும் பொருள் பற்றிக் கோவை நிர்மலா கல்லூரி, புலவர் திருமதி சி. குழந்தையம்மாள் அவர்கள் பேசுகையில், திருவாசகம் மனங்கரைத்து மலங்கெடுக்கும் வாசகம் என்றும், கடையூழி வருந்தனிரை கழிக்கக் கண்ணுதலோன் ஒரு பிரதி திருவாசகம் கொண்டனனென்றும், உண்மையான அன்புநெறி மணிவாசகர் கண்ட திருநெறி என்றும், அப்பெருமாஞர் அடிச்சுவட்டைத் தமிழர் அனைவரும் பின்பற்ற வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். 'மற்றவர் அறியா மாணிக்க மலை' என்பது பற்றித் திருவாவடுதுறை ஆதீன வித்துவான் திரு. த. ச. மீனுட்சிசுந்தரம் பிள்ளையும் 14-ந் தேதி தருமை வித்துவான், திரு. ச. தண்டபாணி

479

தேசிகர் 'கபிலபரணர்' என்பது பற்றியும் 'எழுபிறப்பும் ஆளாவோம்' என்ற பொருள் குறித்துத் தருமை வித்துவான் திரு.சொ. சிங்காரவேலனும், 'நம்பியாண்டார் நம்பியின் பரிசு' பற்றி சீகாழி அரங்காசாரியாரும், 'பட்டினத்தார் நூல்கள்' என்பது பற்றி ஆர். வேலாயுத ஓதுவாரும் 15-ந் தேதி 'மறவாமை வேண்டும்' 'எல்லாம் இன்பமயம்' என்ற பொருள்' கள் பற்றி ஆகமப் பிரவீணர் எஸ். சோமசுந்தர சிவாசாரியாரும் குத்தாலம் வை, சுந்தரேச வாண்டையாரும் சொற்பொழிவாற்றினர்.

இறுதியில் சீகாழிக் கட்டளை விசாரணை ஸ்ரீமத் வித்துவான் மாணிக்கவாசகத் தம்பிரான் ஸ்வாமிகள் நன்றி கூறுகையில், உள்ளங்கவர்கள்வனைக் குழந்தை உள்ளத்துடன் வழிபட்டு, அப்பரடிகளைப் போன்று ஒன்று உண்டு விண்ணப்பமென இறையை விழைந்து கேட்க, பொன்னும் மெய்ப்பொருளுந் தருவானை, மற்றவர் அறியா மாணிக்க மலையை, அல்லும் பகலும் அனவரதமும் துதிப்பதோடு, நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமெனத் திருமூலர் விரும்பியவாறு நம்பியாண்டார் நம்பியின் பரிசினால் ஏற்பட்ட சச்சிதானந்தத்தை எய்தி, எல்லாம் இன்பமயம் என்ற பெரும் பேற்றையடைய, வேண்டுவார் வேண்டுவதே ஈவானான மெய்ப்பொருளின் திருவடியை, மறவாதிருத்தல் வேண்டுமென வலியுறுத்தினர்.

இரவு 7-30 மணிக்குத் திருஞானசம்பந்தர் சந்நிதியினின்றும் யானைமீது அலங்காரத்துடன் ஏற்றுவிக்கப்பட்ட திருமுறைச் சுவடிகளை ஊர்வலமாகத் திருமுறை பாராயணத்துடன் ஏராளச் சைவ மக்களும் நகர்ப் பெருநிலக்கிழார்களும் பேரறிஞர்களும் உடன்வர ஆங்காங்கு பூர்ணகும்ப நிவேதன மரியாதைகளுடன் நான்கு இரத வீதிகளிலும் சிறப்புடன் எழுந்தருளிவித்தனர். அன்பர்கள் வழியில் செய்த உபசரணைகளும் ஆங்காங்கு சிறு அறிவுரைகளும் நிகழ்த்தப்பட்டதோடு சிதம்பரம் திரு. இராமலிங்க ஓதுவார் திருமுறை ஊர்வலச் சிறப்புப் பற்றிப் பேச, திருமுறை மகாநாடு முடிவுற்றது.

480



## திருப்பனந்தாளில்

## தேவாரவகுப்பு ஆண்டு விழா

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேஸ்வர சுவாமி தேவஸ்தானத் தேவாரவகுப்பு நான்காவது ஆண்டு விழா 13—4—54 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு குடந்தை, சப்-ஜட்ஜ் & அஸிஸ்டெண்ட் செஷன்ஸ் ஜட்ஜ், பிர்மஸ்ரீ R. இலக்ஷ்மண ஐயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவர் திரு. G. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் "தொண்டின் உறைப்பும் தமிழின் உறைப்பும்" என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். தேவஸ்தானத் தேவார வகுப்பு மாணவிகள் விழாத் தொடக்கத்திலும் முடிவிலும் தேவாரப் பாடல்கள் பாடினர். வகுப்பு மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப் பெற்றன.

இரவு 7-மணிக்குத் திருமுறைப் பாராயணத்துடன் யானைமீது திருமுறை வீதிஉலா நடைபெற்றது.

திருவிழாவை முன்னிட்டு சிறந்த கீழ்வரும் சமயசாத்திர வல்லுநர்களைக்கொண்டு சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவிக்கப் பெற்றன. 11—4—54 ஞாயிற்றுக்கிழமை தருமபுர ஆதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், புலவர். திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் 'இது-என்-ஆம்' 12—4—54 திங்கட்கிழமை மாலை 6-மணிக்கு காஞ்சீபுரம், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் 'திருமுகப் பாசுரமும் திருச்சாழலும்'. 14—4—54 புதன் கிழமை மாலை 6-மணிக்கு நெல்லை இந்துக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான், திரு. கு. அருணாசலக் கவுண்டர் அவர்கள் 'சைவத்தின்மேற் சமயம் வேறில்லை'. 16—4—54 வெள்ளிக்கிழமை மாலை 6-மணிக்கு திருவாரூர்

481

கழக உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான், திரு. மு. இரத்தின தேசிகர் அவர்கள் 'கலயரன்பும் காவலன் பரிவும்' என்பதுபற்றியும் பேசினார்கள்.

## திருக்கடவூரில் :

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி அம்பாள் சமேத ஸ்ரீ அமுதகடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் 9—4—54 தொடங்கி 18—4—54 முடிய சைத்ரமகோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. உற்சவ நாட்களில் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவிக்கப் பெற்றன. 10—4—54 சனிக்கிழமை மாலை 6-மணிக்கு சிதம்பரம் பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான் திரு. சேதுசுப்பிரமணிய பிள்ளை அவர்கள் 'திருவிளக்கிட்டார்பேறு' என்பதுபற்றியும். 11–4–54 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-மணிக்கு சென்னை கார்ப்பொரேஷன் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம்பிள்ளை அவர்கள் 'சுந்தரர் செந்தமிழ்' என்பது பற்றியும், 13–4–54 செவ்வாய்க்கிழமை மாலை 6-மணிக்கு நெல்லை இந்துக் கல்லூரித்தமிழ்ப்பேராசிரியர், வித்துவான் திரு.கு. அருணாசலக் கவுண்டர் அவர்கள் 'சைவமும் ஏனைய சமயங்களும்' என்பது பற்றியும், 14—4—54 நாகை. நேஷனல் ஹைஸ்கூல் தமிழாசிரியர் வித்துவான், திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்கள் 'காலகாலனைப்' பற்றியும், 15–4–54 வியாழக்கிழமை மாலை 6-மணிக்குத் திருவையாறு அரசர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான், திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் 'திருமுருகன் பெருங்கருணை' என்பதுபற்றியும் 16—4—54 வெள்ளிக்கிழமை மாலை 6-மணிக்கு திருக்கருகாவூர் சமயத்தொண்டர், திரு. மருணீக்கியார் அவர்கள் 'அப்பர் அருள் நூல்' என்பதுபற்றியும் சொற்பொழிவாற்றினர்.

17—4—54 சனிக்கிழமை மாலை 6-மணிக்கு தருமபுர ஆதீன வித்துவான், கீர்த்தனகுலசேகர பாகவதர் எம்பார். பிர்மஸ்ரீ. விஜயராகவாசாரியார் அவர்கள் பார்ட்டியாரால் 'குங்கிலியக்கலய நாயனார்' கதாகாலக்ஷேபம் நடைபெற்றது

H82



### திருவையாற்றில் :

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீஸ்வரசுவாமி பிர்மோற்சவம் 9—4—54 தொடங்கி 18—4—54 வரை மிகச் சிறப்பாக நடைபெற்றது. 20—4—54 ஸ்ரீ ஐயாறப்பர் சப்தஸ்தானப் பிரதக்ஷிணம் செய்தருளினார். திருவிழா நாட்களில் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவிக்கப்பெற்றன. 11—4—54 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு வித்துவான், திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள் 'திருத்தாண்டகம்' பற்றியும், 12—4—54 திங்கள்கிழமை மாலை 6-மணிக்கு வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் 'கரந்தரும்பயன்' பற்றியும், 13—4—54 செவ்வாய்க்கிழமை மாலை 6-மணிக்கு தருமபுர ஆதீனம் பல்கலைக்கல்லூரித் துணைத்தலைவர், வித்துவான், திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்கள் 'அன்புக்கவிதைகள்' பற்றியும் 15—4—54 வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு திருக்கருகாவூர் சமயத் தொண்டர், திரு. மருணிக்கியார் அவர்கள் 'கயிலைக்காட்சி' பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள்.

---

## ஜன்மநக்ஷத்திர அபிஷேக ஆராதனை

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவ ஸ்தலங்கள் தோறும் அபிஷேக ஆராதனை செய்துவரும் வழக்கப்படி இம்மாதத்திலும் 17—4—54 அன்று திருவிற்குடி வீரட்டானம் ஸ்ரீ வீரட்டானேசுவரர் ஆலயத்தில் ஆதீன வெளியீடாக அச்சிட்ட திருவிற்குடி வீரட்டானத் திருப்பதிகம் இலவசமாக வந்திருந்த அன்பர்கட்கு வழங்கப் பெற்றது. ஆதீன ஓதுவா மூர்த்திகளைக்கொண்டு பண் முறைப்படி பதிகம் முழுவதும் பாராயணமாக ஓதப்பெற்றது.

# தருமபுர ஆதீன சமயப் பிரசாரம்

1. **திருக்கடவூர் :** *14—4—54* மாலை 6-மணிக்கு திருக்கடவூர் பிரசாரசபா மண்டபத்தில் வித்துவான். திரு. வி. சா. குருசாமி அவர்கள் " அபிராமி " என்பது பற்றியும், வித்துவான். திரு. வை. திருஞானசம்பந்தம் அவர்கள் 'கடவுளுக்கு விழா' என்பது பற்றியும், திரு. மருள்நீக்கியார் அவர்கள் 'அடியார் பெருமை' என்பது பற்றியும் ஆசிரியர். திரு. தியாகராஜ செட்டியார் அவர்கள் 'அபிராமிபட்டர்' என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். தேவார பாடசாலை மாணவர்களால் திருமுறை பாராயணம் செய்யப்பட்டது.

2. **திருப்பனந்தாள் :** *15—4—54* மாலை 9-மணிக்கு பிரசாரசபா மண்டபத்தில் காசிவாசி சுவாமிநாத சுவாமி செந்தமிழ்க் கல்லூரித் தலைவர் வித்துவான். திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் 'கடவுள் வழிபாடு' வித்துவான் திரு. வை. திருஞானசம்பந்தம் அவர்கள் "போவோம் வாரீர்" திரு. N. வேங்கடராமய்யர் அவர்கள் 'சென்று முந்துமினோ' திரு. அருணஜடேசன் அவர்கள் 'ஆலயவழிபாடு' என்பது பற்றியும் சொற்பொழி வாற்றினார்கள்.

3. **தஞ்சாவூர் சீர்திருத்த உயர்தரப் பள்ளியில்** (Certifid School) *18—4—54* மாலை 4-மணிக்கு திருவையாறு அரசர் கல்லூரி, விரிவுரையாளர் வித்துவான். திரு. அ. அரங்கசாமி அவர்கள் திருநாவுக்கரசு என்பது பற்றியும், வித்துவான். திரு. வி. சா. குருசாமி அவர்கள் 'திலகவதி' என்பது பற்றியும், வித்துவான். திரு. வை. திருஞானசம்பந்தம் அவர்கள் 'கடவுள் வழிபாடு' என்பது பற்றியும் பேசினார்கள். ஷை பள்ளி உதவித் தலைமை ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்கள் நன்றி கூறினார்.

484



**தஞ்சாவூர், பெருவுடையார் கோயிலில்** 18—4—54 இரவு 8-மணிக்கு வித்துவான் திரு வி. சா. குருசாமி அவர்கள் "திருமுறைகளின் பெருமை" என்பதுபற்றியும், வித்துவான், திரு. வை. திருஞானசம்பந்தன் "இராஜராஜன் சிவப்பணி" என்பதுபற்றியும் சொற்பொழிவாற்றினர். திருவையாறு பஞ்சநதீஸ்வரஸ்வாமி தேவஸ்தான தேவார பாடசாலை ஆசிரியர் அவர்களாலும், மாணவிகளாலும் ஒருமணிநேரம் திருமுறை பாராயணம் செய்யப்பட்டது.

**திருவையாறு** 19—4—54 மாலை 6 - மணிக்கு பஞ்சநதீஸ்வரஸ்வாமி பிரசார சபா மண்டபத்தில் ஷை கோயில் கட்டளை விசாரணை ஸ்ரீமத் நாகலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில், வித்வான் திரு இராம. கோவிந்தசாமிபிள்ளை அவர்கள் 'அருட்பால்' என்பதுபற்றியும், வித்துவான் திரு வி சா. குருசாமி 'நாவுக்கரசர்' என்பது பற்றியும் வித்துவான் திரு. தி. கி சுந்தரமூர்த்தி அவர்கள் 'சுந்தரர், என்பதுபற்றியும், திரு. மருள் நீக்கியார் அவர்கள் ஞானசம்பந்தர் என்பது பற்றியும், சொற்பொழி வாற்றினர். தருமபுர ஆதீனப் பாடசாலை மாணவர்களால் திருமுறை பாராயணம் செய்யப்பட்டது.

**திருப்பழனம்.** 20—4—54 காலை $7\frac{1}{2}$ மணிக்கு ஷை கோயில் மண்டபத்தில் வித்துவான் திரு வி. சா. குருசாமி அவர்கள் 'நாவுக்கரசு' என்பது பற்றியும், வித்துவான் திரு. வை. திருஞானசம்பந்தன் 'ஆலயவழிபாடு' என்பதுபற்றியும் திரு. மருணீக்கியார் அவர்கள் 'அப்பூதி அடிகள்' என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினர்,

**திருச்சோற்றுத்துறை:** 10.- மணிக்கு ஷை கோயில் மண்டபத்தில் வித்துவான் திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை வித்துவான் திரு. அ. அரங்கசாமி, வித்துவான் திரு. தி கி. சுந்தரமூர்த்தி, வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார், திரு. ந, மு. கோவிந்தராய நாட்டார் B. A. L. T. திருமானூர் திரு, சுவாமிநாதப்பிள்ளை முதலியவர்கள் சொற்

பொழிவாற்றினர். கோயில் எக்ஸிகியூடிவ் ஆபீசர் திரு. நடராசன் அவர்கள் பிரசாரக் குழுவினரை வரவேற்று மாலை மரியாதை முதலியன செய்தார்கள்,

**திருவேதிகுடி:** மாலை 4-மணிக்கு ஷை கோயில் மண்டபத்தில் வித்துவான் திரு. வி, சா. குருசாமி அவர்களும், திருமருள்நீக்கியார் அவர்களும் சொற்பொழிவாற்றினார்கள்.

**கண்டியூர்:** மாலை 7-மணிக்கு ஷை கோயில் பிரசார சபாமண்டபத்தில், வித்துவான் திரு. இராம. கோவிந்தசாமி பிள்ளை, வித்துவான் திரு. அ. அரங்கசாமி அவர்கள், வித்துவான் திரு. தி. கி. சுந்தரமூர்த்தி, வித்துவான் திரு. வி. சா. குருசாமி, வித்துவான் திரு. வை. திருஞானசம்பந்தன், பாபநாசம் கோயில், டிரஸ்டி கிருஷ்ணமூர்த்தி ஐயர் முதலியவர்கள் சொற்பொழிவாற்றினர்.

**திருப்பூந்துருத்தி:** இரவு 11-மணிக்கு ஷை கோயில் மண்டபத்தில் சைவசமயத்தைப் பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. எல்லாத் தலங்களிலும் தருமபுர ஆதீனப் பிரசார இலவச வெளியீடுகளான இன்பம், நல்வழி, ஆதீனப்பணிகள் தம்பி, தங்கைகள்பணி, அவ்வத்தலங்களின் தேவாரப் பதிகங்கள், ஆற்றுப்படை, பண்டாரமும்மணிக் கோவை, திருச்சிராமலை அந்தாதி, முதலியநூல்கள் மெய்யன்பர்கட்கு வழங்கப் பட்டன. எல்லா ஊர்களிலும் தருமபுர ஆதீனத் தேவார பாடசாலை மாணவர்களால் திருமுறைப் பாராயணம் செய்யப் பட்டது.

**தஞ்சாவூர் புன்னை நல்லூர் மாரியம்மன்கோயில்:** *21—4—54* மாலை 6-மணிக்கு ஷை கோயில் பிரசாரசபா மண்டபத்தில் வித்துவான் திரு வி. சா. குருசாமி அவர்கள் அபிராமி அருள் என்பதுபற்றியும், வித்துவான் திரு. வை. திருஞானசம்பந்தன் காரைக்காலம்மையார் என்பது பற்றியும் திரு. மருள்நீக்கியார் அம்மையின் அருட்பாடல் என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

486



**காரம்பத்தூர்:** *22—4—54* காலை *11* மணிக்கு ஷியூர் பாரதி சேவாசங்கத்தில் வித்துவான். திரு. வி. சா. குருசாமி 'ஆலயத்தின் பயன்' என்பதுபற்றியும், வித்துவான். திரு. வை. திருஞானசம்பந்தன் 'சேவாசங்கத்தின் குறிக்கோள்' என்பது பற்றியும், திரு. மருள்நீக்கியார் அவர்கள் 'அபிராமி' என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினர். சங்க காரியதரிசி திரு. சீனிவாச அய்யங்கார் அவர்களால் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.

**சுந்தரப்பெருமாள் கோயில்** *22-4-54* மாலை 6-மணிக்கு செங்கழுநீர் பிள்ளையார்கோயில் முன் ஷியூர் பஞ்சாயத்து போர்டு தலைவர் திரு. சம்பூரையா அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. வித்துவான் திரு. வி. சா. குருசாமி அவர்கள் அப்பரடிகள் என்பது பற்றியும், திரு, மருணீக்கியார், அருணகிரிநாதர், என்பது பற்றியும், வித்துவான் திரு. வை. திருஞானசம்பந்தன் 'சென்று முந்துமின்' என்பது பற்றியும், தேவார ஆசிரியர் திரு. மாணிக்கம் பிள்ளை நம்பியாண்டார் என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினர். ஆசிரியர் மா. சிவகுருநாதன் அவர்களால் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது. கருகாவூர் விகடக்கலைஞர் திரு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் விகடக்கலை செய்தது அனை வரையும் இன்பத்தில் ஆழ்த்தியது. சுந்தரப்பெருமாள் கோவிலில் திரு. சுவாமிநாத தேசிகர் அவர்கள் பிரசாரக் குழுவினரை வரவேற்று உபசரித்தமை குறிப்பிடத்தக்கது. இரவு 1-மணிக்குப் பிரசாரக்குழுவினர் பிரசார வாகனத்தில் தருமபுரம் வந்து சேர்ந்தனர்.

*11—4—54* மாலை 7-மணிக்குத் தருமபுர ஆதீன சமய பிரசாரகர் திரு. மருணீக்கியார் அவர்கள் தஞ்சை பெரு வுடையார் கோயிலில் 'திருநாவுக்கரசரும் திருவீழா தத்துவ மும்' என்ற தலைப்பில் தக்கதொரு சமயச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். ஆலய நிர்வாகி திரு. மோகனரங்கையா அவர்கள் நன்றிகூறினார்கள்.

---

Speech delivered at the

# International Congress
of
# World Fellowship of Faiths

(D. V. Rajan, Calcutta.)

24—1—1954.

My salutations to Jagat Guru the Chairman, and thanks to the organisers and other members of this Congress for allowing me this rare privilege to address the World through such a distinguished audience.

The subject given to me is Saivaism, a branch of Hindu, followed, if I am right, by the majority of Hindus who accept Lord Siva as their presiding deity.

The formless, all pervading, onnipotent and omniscient God, has been given several names by different religions and such names are qualitative. Similar is the name Siva derived from Sivam, which means well being, peace and bliss. It is the privilege and duty of every embodied soul to work for the attainment of this happiness by disentangling itself from the allurements and distractions of life, which are the causes of sorrow and suffering. Diverse though be the colours of the cows, the colour, taste and benefit of their milk is uniform. Even of such a nature is the uniformity in the fundamentals of all faiths with their superficial differences in names and forms.

I can boldly claim Saivaism to be a universal religion for in the eighth sutra of Sivagnana Siddhiyar a treatise on Saivaism, it ia stated "That is the true Religion, Postulate and book, which not conflicting with this or that, has everything within its own fclds". All these are comprised in the Saivagamas.

487



Then elsewhere in the same work, while explaining the various stages of one's Evolution it is said "One follows the alien religions, then enters the orthodox fold and plods through the paths of Smritis, Asramas, and their duties and after practising Charya, Kriya and Yoga, be reaches the feet of Siva by means of Gnana. Every one must at one time or other, either in the present life or in the past, must have passed through these various phases of thought and action." So you now see that Saivaism is broad in its conception. There is no reference in Saivaite literature to Religious tolerance, and this is due to the fact that this faith is based entirely on the spirit to which we refer when using the word "tolerance".

Now ladies and gentlemen, a few words on Saiva Siddhanta, the doctrine of the orthodox fold of the followers of Lord Siva, mostly residing in South India.

This Siddhanta recognises three fundamentals, Pathi (God) Pasu (Soul) and Pasam (Maya). The soul by its very nature is enveloped by Anavam (ego), Maya (illusion) and Karma (deeds) which veil the real nature of the soul and produces in it, illusory enjoyments, bondage and the capacity for experience. These Malas, as they are called, are only the defects and not the qualities of the soul. Karma is the material cause (mutal Karanam) causing immediate pleasures and pains and therefore called the cause of Bhoga.

Maya is the cause of bondage and as the instrumental (tunai) cause, causes body, senses etc. To enable the soul to enjoy pleasures and pains.

Anava is the cause of Bhoktritva and as the efficient (Nimitta) cause induces all these for its own removal.

This Anava is much more immediate to the soul as the bran in rice and Maya like the husk is useful in removing the bran in pounding.

Saiva Siddhanta considers the Soul and Maya as beginingless and endless as the Lord Himself and God's creation in Siddhanta is therefore limited to His creating the worlds, the bodies and environments only according to the varying desires and needs of the souls just as the potter shapes his wares to suit the tastes and needs of the customers.

Maya is the clay or material cause of the Divine potter. His power the instrumental cause and Himself the efficient Cause.

Out of infinite mercy for the souls weltering in sin and sorrow He wills to save the souls from their misery, and so He sets about this creation to afford opportunities to the souls which by themselves are incapable of finding out the means for enjoyment and thus reaping the fruits of their Karma or actions.

Souls are grouped into three categories - Vignanakalar Pralayakalar and Sakalar. They have respectively attached to them Anava, Anava and Karma. Anava, Karma and Maya. To the first two classes the Supreme shows Himself in Niradhana condition and removes their malas by His Saktinipadas of Tivara and Tivarataram.

To the Sakalas to which group all of us belong He appears in the form of Guru or Master, when their malas had become balanced and removes their sins by means of the four kinds of Saktinipada - the descending of His grace or divine light (Mandatara, Manda, Tivara and Tivaratara).

This Siddhanta has prescribed four paths for realisation. The Sanmarga, Sahamarga, Satputramarga and Dasamarga. These are also called Gnana, Yoga, Kriya and Charya padas or paths.

Dasamarga is the path of service. Washing and cleaning of temples, lighting them, obeying the commands of, devotees etc.

489



Satputramarga is the path of worshipping the symbols of God, with flowers, dupa (incense), dipa (light) etc.

Of the puja ingredients the sandal represents Vairagya, flowers external virtues, dupa or incense the pride to be sacrificed at His feet, dipa, the light one's intellingence, water contentedness and food one's egoism.

Sahamarga is the ashtanga yoga marga with its Yama. Niyama, Asana, Pranayama, Pratyakara Dharna Dhyana and Samadhi.

Sanmarga is the process of assimilation of the essence of Vedas, Puranas and the scriptures of other religions and finally rating all these knowledge as low and holding to the truth of Tripadartha, finding the path of reaching Siva and realising the non-distinction of Gnatru, Gnana and Gneya.

In attaining realisation the help and guidance of a Master is considered to be a necessity. This no doubt finds universal acceptance in all faiths. It is said the Supreme Himself will appear as Guru to the souls in a condition fit to receive His Garce and will convert His disciples into His form by means of touch, thought or sight as a fowl, tortoise or fish hatchesits eggs. After obtaining the Master's grace the soul's knowledge or wisdom gets enlightened.

This enlightenment develops in three stages. The Pasa Gnana, the first stage, consists of the Knowledge of the Vedas, Sastras and similar religious scriptures and the thirtysix Tattvas.

Pasu Gnana the second stage is the knowledge of the soul when it realises that it is above these tattvas.

Pathignana is the third and the last stage which consists n the soul identifying ifself with the Lord forgetting its own

individuality, as water mixed in milk or rivers flown into the sea.

The process of identification with the Supreme is described in ten different steps as follows:-

1. First stage is to know the forms of the 36 Tattvas or realities from earth onwards. This is Tattva - Rupa.

2. Second stage is understanding that each Tattva is inert and can only act with the aid of external force. This is Tattva - Darsan.

3. Third stage is the soul getting himself detached from these Tattvas through the Lord's grace. This is Tattva - Suddhi.

4. Fourth stage is feeling himself an intelligent being after separating from the Tattvas. This is Atma - Rupa,

5. Fifth stage is the soul's realisation of his dependence on the Almighty's will, This is Atma - Darsan

6. Sixth stage is in the soul losing himself in truth and becoming that. This is called Atma - Suddhi.

7. Seventh stage is the souls knowing that God would be pleased to take him to His side as he has now freed himself from the Indryas. This is Siva - Rupa.

8. Eighth stage is the understanding of the soul that it cannot exist without God's Grace. This is Siva - Darsan.

9. Ninth stage is the soul identifying himself with the Lord. This is Siva - Yoga.

10. The last stage is reached when the soul is landed in bliss. This is Siva - Bhoga.

4791



Now ladies and gentlemen! this is a brief outline of Saiva Siddhantha.

Before concluding I would draw one or two comparisons between this faith and Christianity.

The highest injunction in Saiva Siddhanta is to stand still, do God's bidding and become one with Him. So long as there is the play of his own egoism the superior light cannot cast on him.

Similarly Christ says "Abide in me". It is a soul silent into God that is the preparation for knowing Jesus and for holding fast the blessings He bestows. He can do His work perfectly only when the soul ceases from its work.

Saint Tirumular, a Saivaite saint says :-

Oh ye fools! who attempt to speck of the unspeakable
Can you find the limits of the limitless deep?
To him who attains rest as the waveless sea,
Well the Lord of the Braided Hair manifest Himself.

Herein lies the fundamental unity in the teachings in the scriptures of the East & West. A proper understanding of these fundamentals will no doubt cement the solidarity of the Fellowship of World Faiths.

Apart from their spiritual importance the works on Saiva Siddhanta and the mystic poetry of Saivaite saints have a special literary value. The terseness of Sivagnana Bodham, the illustrations of Sivagnana Siddhiar, the lyric beauties of Thevaram and Thiruvachagam, the epic grandeur of Peria-puranam and the rhythmic and subtle exposition of the philosophy in 'Kandar Kalivenba' have endeared Tamil literature to foreign savants and lovers of philosophy.

Om! Sivam! Santi!

# மதிப்புரைகள்.

## சிவஞான போதமும் - பன்னிரு திருமுறையும் :-

திருவாவடுதுறை ஆதீன வெளியீடு. இயற்றினோர்- ...டி ஆதீன வித்துவான், திரு. தே. ஆ. ஸ்ரீநிவாசாசாரியார். ...க்கங்கள் 173.

சித்தாந்த சாத்திர நூல்களில் சிவஞானபோதம் பன்னிரு சூத்திரக் கருத்துக்களைத் தோத்திர நூல்களாகிய பன்னிரு திருமுறைகளோடு இணைத்துக் காணுவது இந்நூலின் நோக்கம். சமயத்தின் இருகண்களென விளங்குவனவாய இவ்விரு பெரு நூல்களை ஒருவாறு உரைநடையில் ஆராய்ந் துள்ளார் ஆசிரியர். இது ஒரு புது முயற்சி.

இந்நூல் சாத்திரத்தின் ஒவ்வொரு சூத்திரத்தோடு ஒவ்வொரு திருமுறையின் முதல் திருப்பாட்டிலே ஒவ்வொரு சூத்திரத்தின் கருத்தும் முறையே அமைந்திருப்பதை இந் நூலாசிரியர் ஆராய்கிறார். அவ்வத்திருமுறையின் இறுதிப் பாடல்களும் அவ்வச்சூத்திரக் கருத்துக்களுக்குப் பொருத்த மாக இருப்பது ஆராயப்படுகிறது. அன்றும் இன்றும் துறைசையாதீனம் தமிழின் உறைவிடம். தமிழ் நூல்களை வெளியிட்டும் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தும் வருவதைத் தமிழுலகம் நன்கறியும். சமய சாத்திர நூல்களை வெளியிட்டு சமய அறிஞர்களுக்குப் புதுவிருந்து தரும் துறைசை மகாசந்நிதானம் அவர்கட்குத் தமிழுலகம் என்றென்றும் கடப்பாடுடையது.

## கலைவிழா சிற்பமடல் (படங்களுடன்) :-

கலைக்கூடம் வெளியீடு. பக்கம் 173. தஞ்சைக் கலைக் கூடம் தமிழகத்தின் கலைக்கூடம். கலைக்கூடத்தைக் காணும் போது தென்னாட்டையே ஒரு சுற்றுச்சுற்றி வந்துவிடுவோம்.

மலையைக் குடைந்தெடுத்து மாபெருங் கோயில்களாகச் சமைத்த மகாபலிப்புரக்கலை மறக்க முடியாத கலை. குடுமியா மலைக் குகைக்கோயில், சித்தன்னவாசல் ஓவியங்கள், திருமயம் கோயில், திருச்சிமலைக்குகைச் சிற்பங்கள், தென்காசிக்கோயில் சிற்பங்கள், மதுரைப் புதுமண்டபம் சிற்பங்கள் கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம், ஆவுடையார்கோயில் ஆலயங்கள் முதலியன எல்லாம் தென்னாட்டின் கலைவளர்ச்சி யின் சிறந்த சாதனைகளை வெளிப்படுத்துவன. இத்தனைக் கலைக் காட்சிகளையும் சிற்பங்கள், ஓவியங்கள், புகைப்படங்கள் மூலம் காண்கின்றோம் தஞ்சைக் கலைக்கூடத்தில்.

மலரின் அட்டையை அலங்கரிப்பவள் அன்னை அன்ன பூரணி. அரும்பிய மூரல்', கையில் அமுதகலசம், மற்றொ கையில் அலர்ந்த அரவிந்தம். கலையைத் தெய்வத்தோ ஓட்டிப்பார்த்து வந்தமையை இந்நூலின்கண் அமைந்த பட படங்கள் விளக்குகின்றன. நான்முகக்கடவுள், நர்த்த விநாயகர், திரிபுராந்தகர், கஜசம்ஹாரர், வீணாதர தக்ஷிண மூர்த்தி, சிவபார்வதி, பிக்ஷாடனர், கங்காளன், மணக்குடி மகாவிஷ்ணு, திருவெண்காடு கல்யாண சுந்தரர், ரிஷபதேவர், இராஜராஜனும் அவன் மனைவியும், சரபோஜி மன்னன் (சலவைக்கல்லில்) வேள்விக்குடிக் கல்யாணசுந்தரர், ஞான சரஸ்வதி, மாதிருக்கும் பாதியன், வில்லேந்திய வேலன் சூரியன், ஆகிய மூர்த்திகளின் உருவங்கள் கல்லிலும் செம்பிலும் அமைந்தவைகளின் உருவப்படங்கள் இடம் பெற்றுள்ளன. படத்தை நன்கு புரிந்துகொள்ளக்கூடிய அளவில் பட விளக்கங்களும் தரப்பெற்றுள்ளன. இவ்வகையில் கலை விழா சிற்ப மடலைக் கலைமணங்கமழச் செய்தவர் தஞ்சை திரு. T. M. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் ஆவார்கள் (காரியதரிசி).

தஞ்சை ஜில்லா கலெக்டர் திரு ஸ்ரீ R. M. சுந்தரம் I. C. S. (கலைக்கூடத் தலைவர்) அவர்களின் முயற்சி பாராட்டுக்குரியது. சிறந்த இம்மலர் தருமபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அன்பளிப்பாக வெளி வந்துளது.

## பிள்ளைப்பாட்டு :

பக்கங்கள் 133. தொகுப்பும் உரையும் - திரு ராய சொக்கலிங்கஞ்செட்டியார் அவர்கள்.

இது ஒரு தொகுப்பு நூல் பிள்ளைமைத் தன்மையைப் பாடிய பலர் பாடல்கள் இதில் இடம் பெற்றுள்ளன. திரு. மால் அம்பிகை, முருகன், காந்தி, ஆகியவர்களைப் பிள்ளை களாக்கிப் பாடிய பாடல்களையும் தாலாட்டையும் கொண்டு விளங்குவது இந்நூல். குலசேகராழ்வார், பெரியாழ்வார், குமரகுருபரர், பகழிக்கூத்தர், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, அந்தகக்கவி வீரராகவ முதலியார், மார்க்க சகாய தேவர், முதலியோரின் பாடல்கள் சில இதில் இடம் பெற்றுள்ளன.

H44.

# கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. முத்துசோதிடர், திருவிடைமருதூர்.

(ஜய-ஸு வைகாசி-மீ 1-உ முதல் 32-உ முடிய)

(14—5—54 முதல் 14—6—54 முடிய)

**1. மேஷம்:** அசுவதி, பரணி, கார்த்திகை ¼.

அசுவதி நான்கு பாதமும், பரணி முதல்பாதமும் விசேஷமான லாபகரங்களையும், மேலோர் பெரியோர்களால் நன் மதிப்பையும், வியவஹார விஷயத்தையும், இல்லற சுகத்தையும் தொழில் மேன்மையையும் தரும். பரணி 2, 3, 4. பாதங்களும் கார்த்திகை முதல் பாதமும் அதிக சிரமபலன்களையும் சரீர ஆயாசத்தையும், வாஹனுதிகளால் பயத்தையும் எதிர் பாராதபடி நஷ்ட கஷ்டங்களையும் அடிக்கடி ஸஞ்சாரபலனையும் மன துக்குத் தாங்கமுடியாதபடி கிலேசங்களையும் உண்டு பண்ணும். புதனும், வியாழனும் சுபமாகும்.

**2. விருஷபம்:** கார்த்திகை ¾, ரோஹிணி, மிருகசீரிஷம் ½

கார்த்திகை 2, 3, 4 பாதங்களும், ரோஹிணி 1, 2 பாதங்களும் ரோகத்தையும், அபவாதபயத்தையும், தேவகோபத்தையும் எதிலும் அபஜயத்தையும் தரும். மிருகசீரிஷம் முன்னரை ஏராள நஷ்டத்தோடு ஜயத்தை மாத்திரம் கொடுக்கும். தைவபலமெல்லாம் மறையும். மனம் மாறுதல் ஏற்படும். ரோஹிணி 3,4 பாதங்கள் பழையசிநேகிதர் ஒருவரால் விசேஷ நன்மையை தரும், ஸாதுக்களுடைய சேர்க்கையும், தைவ பலமும் கிட்டும். குடும்பத் தொல்லையாலும் நம்பினவர்கள் மோசம் செய்வதாலும் பலவித கஷ்டங்கள் ஏற்பட்டுமாறும். விருஷபராசிபலன் பொதுவாய் விசேஷ நன்மையே இராமல் நடக்கும். வெள்ளியும், புதனும் சுபமாகும்.

**3. மிதுனம்:** மிருகசீரிஷம் ½, திருவாதிரை, புனர்பூசம் ¾

மிருகசீரிஷம் 3, 4 பாதங்கள், சுபத்தையும் குடும்பமேன்மையையும் உத்தியோக லாபத்தையும் ஜயத்தையும் தரும்.

திருவாதிரை தொல்லைகளை அனுபவித்துக்கொண்டே உலகில் நன்மையையும் கீர்த்தியையும் தரும். ஆனால் தனக்ஷேபம் இருந்துகொண்டே இருக்கும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்களும் அதிக துக்கபலனையே தரும். குடும்பத்தில் ஒற்றுமைக்குறை வையும், சதா வியவகாரத்தையும் பெரிய கிரிமினல் கேஸை யும் புத்திரர்களால் தாங்கமுடியாத கஷ்டங்களையும் எல்லோருடைய விரோதத்தையும் தரும். தைவபலமே இராது. புதனும், சனியும் துக்கம் தரும். புததிசையும் சனிதிசையும் சேர்ந்தவர்கள் அதிகம் பாதிக்கப்படுவார்கள். வெள்ளிக் கிழமை சுபமாகும்.

4. **கடகம்:** புனர்பூசம் ¼, பூசம், ஆயில்யம்.

பூசம் நான்குபாதங்களும், அவமானத்தையும், அபஜயத் தையும், நஷ்டத்தையும், விரோதத்தையும், ராஜாங்கத்தால் துன்பத்தையும் தரும். புனர்பூசம் 4ம் பாதம் மிசிரமாய் நடக்கும். ஆயில்யம் நான்குபாதங்களும் சுபத்தைத் தரும். மத்தியில் குடும்பத்தொல்லைகளையும், அதிக உழைப்பையும் தரும். நல்லோர் பெரியோர் ஆசீர்வாதமும் தைவபலமும் முன் நின்று சுபத்தையும் ஜயத்தையும் தரும். தொழில் ஓங்கும், கடன் நிவர்த்தியாகும். ஸ்தாவர சொத்து லாபகரத்தோடு விலகும், மனம் சாந்தியடையும். வெள்ளியும் புதனும் சுப வாரமாகும்.

5. **ஸிம்மம்:** மகம், பூரம், உத்திரம் ¼.

ஸிம்மராசிக்காரர்கள் எல்லோருமே சந்தோஷமடைவார் கள். உத்தியோகமேன்மை, கைத்தொழில் விருத்தி, நஷ்டதன வரத்து, சுபசோபனாதிகள் காலிகன்று விருத்தி, வாகனலாபம் வியாபாரப்பெருக்கம் தூரயாத்திரை பந்துமித்ராளுடைய சேர்க்கை முதலிய சுபங்கள் நடக்கும். சனி, ஞாயிறு, வியாழன் சுபவாரமாகும்.

6. **கன்னி:** உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½.

உத்திரம் 2, 3, 4 பாதங்களும், ஹஸ்தம் 1, 2, 3, 4 பாதங்களும், சித்திரை 1, 2 பாதமும் மேலோர் பெரியோர்

496

நேசமும், வியவஹார வெற்றியும், சத்துருக்கள் சரண் அடைதலையும், கீர்த்திபத்திரத்தையும், உத்தியோக லாபத்தையும் மங்களகாரியங்களையும், ஆரோக்யத்தையும், பிரதிஷ்டாதி யக்ஞ யாகாதி பலன்களையும், ஸ்திர லக்ஷ்மீவாசத்தையும் தரும். புதன், வியாழன், வெள்ளி சுபவாரமாகும்.

7. **துலாம்:** சித்திரை ½, சுவாதி, விசாகம் ¾.

சித்திரை 3, 4 பாதங்கள் மிசிரமாய் நடக்கும். சுவாதி, பூர்ண சுபபலனையும், அஸாத்தியமெல்லாம் சுலபசாதனையையும், நஷ்ட தனலாபத்தையும் கடன் நிவர்த்தியையும் தந்து, மங்களமான சுபசந்தோஷத்தையும் தரும். விசாகம் 1, 2, 3 பாதங்கள் அசுபமேதந்து துக்கத்தையே அனுபவிக்கச் செய்யும். பூர்வீக புண்ணியமெல்லாம் வீணாகும். கடவுள் கிருபையை தேடிக்கொள்பவர்கள் அதிக சிரமமில்லாமல் இருப்பார்கள். சனி, செவ்வாய் சுபவாரமாகும்.

8. **விருச்சிகம்:** விசாகம் ¼, அனுஷம், கேட்டை.

விசாகம் நாலாம்பாதம், சுபாசுபம் கலந்து நடக்கும். அதிக கஷ்ட நஷ்டங்கள் காட்டும். அனுஷமும் கேட்டையும் பூரா நான்கு பாதங்களும் விவாஹாதி சுபங்கள், தூரத்திலிருந்து பந்துஜனமித்திராள் வரத்து, ஸ்தாவர ஜங்கமம் கிரயவிக்ரயங்கள். வாழ்த்துப்பத்திரங்கள் கிடைத்தல் மனோல்லாஸம். உத்யோக லாபம் தொழில் மேன்மை, வாஹன யோகம், அபூர்வ தரிசனம் தைவபலம் பிரகாசித்தல் முதலிய சுபங்கள் ஏற்படும். சனி, ஞாயிறு சுபவாரமாகும்.

9. **தனுசு:** மூலம், பூராடம், உத்திராடம் ¼.

மூலம் நான்கு பாதங்களும் கவலையோடு ஓடிக்கொண்டிருக்கும். பூராடம் நான்கு பாதங்களும் ஜயத்தையும் லாபத்தையும், எடுத்த காரியம் ஸாதிப்பதையும், பெரியோர்கள் அன்பையும் ஆசிர்வாதத்தையும் தரும். உத்திராடம் முதல்பாதம் இடம் மாறுதலையும் சுப ஸந்தோஷத்தையும் ஸ்தாவர ஜங்கமசொத்துக்களையும் தரும். புதன் வெள்ளி சுபமாகும்.

H97



**10. மகரம்:** உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம் $\frac{1}{2}$.

உத்திராடம் 2, 3, 4 பாதங்களும், திருவோணம் நான்கு பாதங்களும் அலைச்சலுடன் ஸந்தோஷத்தையும் உத்யோக பிரமோஷனையும், லாபத்தையும் ராஜாங்க நன்மதிப்பையும் ஆரோக்கியத்தையும் தரும். அவிட்டம் முதல் இரண்டு பாதங்கள் அதிக உழைப்பும், லாபக்குறையும், வீண் மனஸ் தாபங்களையும் தரும், ஈசுவர தியானத்தால் மாறும். புதன் வெள்ளி நலம் தரும்.

**11. கும்பம்:** அவிட்டம் $\frac{1}{2}$, சதயம், பூரட்டாதி $\frac{3}{4}$.

அவிட்டம் 3, 4 பாதங்கள், வேதனை உண்டுபண்ணும். கஷ்டப்பட்டு தொழில்கிட்டும். குடும்பத்தொல்லையும் வறுமையும் வாட்டும். சதயம் 4 பாதமும் சுபமங்களத்தால் அதிக செலவைத் தரும், விரோதம் காட்டும். வியவஹாரம் கிட்டும். வீண் நஷ்டம் ஏற்படும். பூரட்டாதி 1, 2, 3 பாதங்களும் இல்லறசுக சயனபோகத்தையும், ஸஞ்சார பலனையும், பரஸ் தல வாஸத்தையும், புத்திராதிகளால் மேன்மையையும் ஆரோக்கியத்தையும் தந்து ஸந்தோஷமுண்டாக்கும். புதன் வியாழன் சுபவாரமாகும்.

**12. மீனம்:** பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி, ரேவதி.

மீனராசி ஸம்மந்தப்பட்ட நக்ஷத்திரங்கள் பூராவுமே ஸந்தோஷமாக நடக்கும். தொழில் ஓங்கும். நஷ்ட தனம் வரும். பெரியோர் அன்பு கிட்டும். உத்யோக லாபமும், இடம் மாறலும் தைவ சக்தியும் பிரகாசிக்கும். இல்லற சுகமும் பெற்றோர்களுடைய அன்பும் கிட்டும். ராஜாங்க மதிப்பு உண்டாகும். புதன் வியாழன் சுபத்தை தரும்.

தருமபுர ஆதீன வெளியீடு.

# திருஞானசம்பந்தர் தேவாரம்

## முதல் திருமுறை

---

திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், குடந்தை ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் ஆகியோர்களின் மதிப்புரைகள் கொண்டது.

ஆதீனப்புலவர் வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் எழுதிய குறிப்புரையும், இத்திரு முறையில் வந்துள்ள தலங்களைப்பற்றிய புராணவரலாற்றோடு கூடிய கல்வெட்டு ஆராய்ச்சிக்குறிப்புக்களும் இதில் இடம்பெற்றுள்ளன. அற்புதச்செயல்களைக் காட்டும் படங்களும், கோயிற்படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

டிம்மி 1 x 8 சைஸ். பக்கங்கள் 768.

**விலை விபரம்:**

| | | |
|---|---|---|
| **ராப்பர் பைண்டு:** | ... | ரூ. 3—8—0 |
| ரிஜிஸ்டர் தபாற்செலவு | | ரூ. 1—5—0 |
| **காலிகோ பைண்டு:** | ... | ரூ. 5—0—0 |
| ரிஜிஸ்டர் தபாற்செலவு | | ரூ. 1—8—0 |

கிடைக்குமிடம்:—

தருமபுர ஆதீன மடாலய தேவாலய
சமயப்பிரசார நிலையம்,
41. ஊஸ்மான்ரோடு,
தியாகராயநகர் சென்னை.

## வேளூரில் வசந்தோற்சவம்

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான வைத்தீஸ்வரன் கோயில் தேவஸ்தானத்தில் ஸ்ரீ வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்திய நாதஸ்வாமிக்கு நிகழும் ஜயஞு சித்திரைமீ 26உ (8–5–54) முதல் வைகாசிமீ 4உ (17–5–54) முடிய வசந்தோற்சவம் நடைபெறும்.

திருவிழா நாட்களில் மாலை 6 மணிக்கு சொற்பொழிவு, இசை நிகழ்ச்சி தினந்தோறும் நடைபெறும். பிரகார உலாக் காட்சியும், வசந்த மண்டபத்தில் ஊஞ்சல் காட்சியும் சிறப்பானது.

## சீகாழி தேவஸ்தானத்தில்

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாத ஸ்வாமி தேவஸ்தானத்தில் நடைபெற்ற சைத்திரோற்சவத் திரு விழாவில் 14, 15, 16–5–54 ஆகிய மூன்று நாட்களிலும் (திருஞான சம்பந்தர் அவதாரம் அற்புதங்கள், திருமணம் ஆகிய தலைப்புக் களில் தருமபுர ஆதீன வித்துவான், கீர்த்தன குலசேகர, பாகவதர் எம்பார் பிர்மஸ்ரீ S, விஜயராகவாசாரியார் அவர்களால் கதா காலக்ஷேபம் நடைபெற்றது.

## கருங்குயில்நாதன்பேட்டையில் கும்பாபிஷேகம்

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான கருங்குயில்நாதன் பேட்டை ஸ்ரீ சக்திபுரீஸ்வரர் ஆலயத்தில் ஸ்ரீ ஆனந்தவல்லி அம்பாள் விமானம் செப்புக்கலசம் புதிதாக அமைக்கப்பெற்று 9—5—54 ஞாயிற்றுக்கிழமை காலை 8-மணிக்கு கும்பாபிஷேகம் நடத்தப்பெற்றது. திரளான மக்கள் வந்து தரிசித்து இன்புற்றனர்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram (Mayuram). 10—5—1954.